இந்திய சுதந்திர
தின சிறப்பிதழ்

ஞாயிறுக்கிழமை 14 ஆகஸ்ட் 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 12

தமிழின் தலைநிமிர்வு

இந்திய சுதந்திர 75 ஆவது தினம் ஆகஸ்ட் 15

HAPPY 75th INDEPENDENCE DAY INDIA



## கதர் ஆடையெனும் இந்தியர்களின் கர்வம்!

## இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் வகிபாகம்

## சுதந்திரத்தின் தித்திப்பு ஜிலேபியாய் நாவில்

## பாரதியார் கவிதைகளில் வெளிப்படும் சுதந்திர வேட்கை

## அரசியலமைப்பின் அழூநாதம் அண்ணல் அம்பேத்கர்!

## அகிம்சையின் அறுவடையில் விளைந்த சுதந்திரம்!

# ராஜபக்ச குடும்பத்துக்கு அமைச்சரவையில் இடமில்லை

## உறுதிபட தெரிவித்த ரணில் தரப்பு



ராஜபக்ச குடும்பத்தை சேர்ந்த எவருக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்று ரணில் தரப்பு தெரிவித்துள்ளதாக சிங்கள வார ஏடொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நாளேட்டின் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள்:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த எவரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று ரணில் தரப்பில் சக்தி வாய்ந்த ஒருவர் அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் நாமலுக்கு அமைச்சுப் பதவி கிடைக்காது விட்டால், இந்த அரசாங்கம் கலைக்கப்படும் வரை நாடாளுமன்ற உறுப்பினராகவே இருக்க வேண்டும் எனவும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆசனம் கிடைக்காது போனால், அவரது அரசியல் எதிர்காலம் நிச்சயமற்றதாகி விடும் எனவும் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் தரப்பை சந்திக்க சென்ற போது தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

அதற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால் தனக்கு அமைச்சுப் பதவியை தருமாறு ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்று நாமல் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலம் வாய்ந்த நாடுகளின் வேட்டைக் களமாக இலங்கை மாறிவிட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு!



பலம் வாய்ந்த நாடுகளுக்கு வேட்டைக்களமாக இலங்கை மாறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதன் மூலம் தேசிய பாதுகாப்பு கூட நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ராஜபக்சர்களால் இந்நாட்டின் முதுகெழும்பு உடைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய பாதைக்கு பதிலாக தவறான பாதையை தெரிவு செய்ததன் அவலத்தை இன்று நாடு எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டை கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்திக்கே உண்டு எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தற்போதைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை அரசியலமைப்பு ரீதியாக சரியானது என்றாலும், அங்கீகாரம் மற்றும் மக்கள் அபிப்பிராயம் என்ற அடிப்படையில் இது முற்றிலும் மாறுபட்ட நிலை' எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தை விட நிகழ்காலம் முற்றிலும் மாறுபட்டது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்நாட்களில், பெரும்பாலும் அரசியல் முடிவுகளை எடுப்பதில் முன்னுரிமை பெற்றது பெரியவர்களே என்றாலும், இன்று இளம் தலைமுறையினர் அதை வீட்டில் கூட பெற்றுள்ளனர் எனவும் தெரிவித்தார். தேர்தலில் முடிவெடுப்பது குறித்து வீட்டில் செல்வாக்கு செலுத்துவது இளைஞர் சமுதாயத்தினரின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களின் பிரகாரமே என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

தம்மிடம் இரத்தம் சிந்திய வரலாறு இல்லை எனவும், தமது வங்கி கணக்குகளில் போதைப் பொருட்கள் விற்ற பணம் இல்லை எனவும், தம்மிடம் எந்த வித கபடத்தனமும் இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஓர் அணியாக இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டில் இரண்டு சட்டங்கள் இருக்க முடியாது!

## பேராயர் மேல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தல்





குற்றச்செயல்கள் தொடர்பான பல விசாரணைகள் மூடி மறைக்கப்படுவதாக பேராயர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்ஸினால் வழங்கப்பட்ட உதவிகளை வழங்கும் நிகழ்வு கட்டுவாப்பிட்டியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு வாரங்களுக்குள் பயங்கரமான நிகழ்வுகளை மறந்து விடுகின்ற மோசமான பாரம்பரியம் இலங்கையர்களிடம் உள்ளது.

இலங்கையில் காலங்காலமாக நடந்த கொலைகள், கொடூரமான தாக்குதல்கள், பேருந்து குண்டுகள், தொடரூந்து குண்டு தாக்குதல்கள், அரசியல் தலைவர்களின் கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டோர், வெள்ளை வேன் கடத்தல்கள் போன்றவற்றை மறந்துவிடும் போக்கு உள்ளது.

இலங்கையின் நவீன வரலாற்றில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் எதுவும் எந்தவொரு அரசாங்கத்தினாலும் உரிய விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. சில சமயங்களில் விசாரணைகள் அனுமதிக்கப்படவில்லை அல்லது மறைக்கப்பட்டு தாமதப்படுத்தப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. எனவே, நாட்டின் சட்டத்தின் தொடர்புடைய நிறுவனங்கள் சுயாதீனமாக இருக்க வேண்டும், காவல்துறையும் சுயாதீனமாக இருக்க வேண்டும் என்று கொழும்பு பேராயர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் அழுத்தங்களுக்கு பொலிஸார் தொடர்ந்தும் அடிபணிய முடியாது, மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் தற்போதுள்ள முறைமை மாற வேண்டும். நேர்த்தியான ஆடை அணிந்தவர்களுக்கு ஒரு சட்டமும், தெருவில் வேலை செய்பவருக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நாட்டை ஆளும் தலைவர்கள், நாட்டில் வெளிப்படையான நீதி முறைமையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாகவும் பேராயர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தாய்லாந்தில் பரிகாரம் தேட விகாரைகளுக்கு செல்வதற்கு அனுமதி கோரிய கோட்டாபய



தாய்லாந்தில் அடைக்கலம் புகுந்துள்ள முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச அங்குள்ள பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபாடு செய்து, பரிகாரம் தேட அந்நாட்டு அரசிடம் அனுமதி கோரியுள்ளதாக சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டள்ளது.

இது தொடர்பாக அந்த நாளேட்டின் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள்:

தாய்லாந்தில் 90 நாட்கள் தங்குவதற்கு கோட்டாபய ராஜபக்சவுக்கு அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த அனுமதியானது நிபந்தனைகளுக்கு உட்பட்டே வழங்கப்பட்டது. தாய்லாந்தில் தங்கியிருக்கும் காலத்தில் கோட்டாபய ராஜபக்ச எந்தவொரு அரசியல் நடவடிக்கைளிலும் ஈடுபட மாட்டார் என்று அந்நாட்டு அரசுக்கு அளித்திருக்கும் உறுதிமொழிகளில் முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்துக்கு எந்த பிரச்சினையும் வராத வகையில் நடந்து கொள்வதாக உறுதியளிக்க வேண்டும் என்பது மற்றொரு நிபந்தனை. அவர் தங்கியிருக்கும் கால கட்டத்தில் அவருக்கு முழுமையான பாதுகாப்பு அளிப்பதாகவும் அந்த நாடு உறுதியளித்துள்ளது. குறிப்பாக, கோட்டாபய ராஜபக்சவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு அனுமதி உள்ளதால் தாய்லாந்தில் 90 நாட்களுக்கு தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாய்லாந்திடம் கோட்டாபய ராஜபக்ச விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே இவ்வாறான அனுமதி கிடைத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கம் தாய்லாந்துக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. தாய்லாந்திடம் கோட்டாபய ராஜபக்ச அரசியல் தஞ்சம் கோரவில்லை எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், தாய்லாந்தில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபடுவதற்கு கோட்டாபய ராஜபக்ச அந்நாட்டு அரசிடம் அனுமதி கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இருந்த போதிலும் தாய்லாந்து அரசு அதற்கு அனுமதி மறுத்துள்ளது.

மூன்று மாத காலத்தில் பௌத்த விகாரைகளை தரிசிக்கும் அதிர்ஷ்டம் அவருக்கு கிடைத்தால், அவர் ஆட்சியில் செய்த தவறுகளுக்குப் பரிகாரம் தேட வாய்ப்பு கிடைத்தால், அது ஒரு புண்ணிய செயலாக கருதப்படலாம் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற சகல பாடசாலைகளும் நாளை ஆரம்பம்!

## வாரம் 5 நாட்களும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானம்

இதற்கமைய நாளை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை வழமையான அடிப்படையில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை பாடசாலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினை காணப்படும் பகுதிகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக பொருத்தமான போக்குவரத்து வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக சகல மாகாண அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நாளை ஆரம்பமாகும் பாடசாலை வாரத்தில் போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக உரிய வகையில் அதிபர்களினால் சலுகை வழங்கப்படும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சலுகை வழங்கப்பட வேண்டிய முறைமை தொடர்பில் மாகாண கல்வி பணிப்பாளர்களினால் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று மாதங்களில் பாடங்களை உரிய முறையில் கற்பிப்பதற்காக பாடசாலை நேரம் பயன்படுத்தப்பட வேண்டும். பாடசாலை நேரத்திற்கு மேலதிக பாடநெறிக்கு புறம்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவும், பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளை மட்டுப்படுத்துவதற்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் தடையை நீக்கியது இலங்கை அரசாங்கம்

கடந்த காலங்களில் இலங்கையில் தடை செய்யப்பட்ட 06 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் 316 தனிநபர்களுக்கு எதிரான தடையையும் இலங்கை நீக்கியுள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1373 மாநாட்டின் கீழ், தற்போது கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட குறித்த ஆறு அமைப்புகளின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அவுஸ்திரேலிய தமிழர் பேரவை - உலகத் தமிழர் பேரவை - உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு - திராவிட ஈழ மக்கள் கூட்டமைப்பு - கனடியத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுக்கான தடையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கு அமைய ,கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் பின்னர் கோட்டாபய ராஜபக்ச நிர்வாகமும் தமிழ் குழுக்களை தடை செய்திருந்தது.




**செய்தி:-**

*ஊவா ஹாலி எல பிரதேசத்தில் வீட்டுத்தோட்டத்தில் 15 அடி கஞ்சா செடி வளர்த்தவர் கைது!*

**வீட்டுல தோட்டம் வளக்க சொன்னா நாட்டுக்கே போதைய வளத்து......**

# இந்தியாவுக்கு அஞ்சக்கூடாது என்று கூறிய சரத் வீரசேகர

## சுரேன் ராகவனால் கலங்கிய மகிந்த

சீனாவின் கப்பலால் இந்தியா தரும் அழுத்தங்களுக்கு நாம் அஞ்சக்கூடாது என்று சரத் வீரகேசர தெரிவித்ததாகவும், அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சுரேன் ராகவன் தெரிவித்த கருத்துக்களால் மகிந்த ராஜபக்ச கலங்கியதாகவும் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை அந்த இணையத்தளம் வெளியிட்டுள்ள நீண்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள்:

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சீனக் கப்பல் தொடர்பான செய்திகள் பிரதானமாக பேசப்பட்டிருந்தன.

கூட்டத்தின் தொடக்கத்தில் இது குறித்து ரணிலிடம் கேள்வி எழுப்பிய, சரத் வீரசேகர, சீனக் கப்பலுக்கு சிறிலங்கா வர அனுமதி வழங்க வேண்டும் எனவும், இந்தியாவின் எதிர்ப்புக்கு அஞ்சி அனுமதி மறுக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டில் இந்தியா எமக்கு என்ன செய்தது என்பது எங்களுக்கு நினைவிருக்கின்றது. இந்திய இராணுவத்தை அனுப்பினார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு வான்வெளி ஊடாக உணவுப் பொதிகளை இறக்கினார்கள். இதன் மூலம் இந்தியா எதனை வேண்டுமானாலும் செய்ய அனுமதிக்க முடியாது. சீனக் கப்பலை உள்ளே அனுமதிக்க வேண்டும். அன்று முதல் சீனா நம்முடன் இருந்து வருகின்றது. எனவே, அனைவரும் கூறுவது போன்று முடிவுகளை எடுக்காமல் நாம் விரும்பியவாறு முடிவுகளை எடுக்க வேண்டும் என்று சரத் வீரசேகர கூறியபோது, ரணில் சற்று அதிருப்தியுடன் பதிலளித்ததை காணக்கூடியதாக இருந்தது. அதற்கு இணங்க ரணில் அதற்கு சரியான பதில் அளித்ததுடன், இந்த நேரத்தில் நாடுகள் கோபப்படாமல் வேலை செய்ய வேண்டும் என்றார். தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் ஒரு வித்தியாசமான கதையுடன் வெளிவந்தார். அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு சொந்தமானது என்பதால், சீனா தனது கப்பல்களை எந்த நேரத்திலும் அதற்கு கொண்டு வரலாம் என்றும் ராகவன் கூறினார். ஆனால், ராகவனின் இந்த விசித்திரக் கதையால் உடனடியாக கலங்கிய முன்னாள் அரச தலைவர் மகிந்த, அது முற்றிலும் தவறு எனத் தெரிவித்துள்ளார்.









இல்லை, இல்லை... அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு இலவசமாக வழங்கப்படவில்லை. இது சீனாவுக்கு மட்டுமே குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைக்கு எப்போது வேண்டுமானாலும் கப்பல்களை கொண்டு வர முடியாது என்று மகிந்த கூறியபோது, ரணிலும் அதற்கு ஒப்புதல் அளித்து, அந்த அறிக்கையை உடனடியாக பின்வாங்குமாறு ராகவனிடம் தெரிவித்தார். அதன்படி ராகவன் தனது அறிக்கையை பின்வாங்கினார்.

எவ்வாறாயினும், இவ்வாறானதொரு இராஜதந்திர நெருக்கடி உருவாக வழிவகுத்தது யார் எனவும் பிரமித பண்டார தென்னகோன் கேள்வி எழுப்பியுள்ளார். இந்தக் கப்பல் யாரால், எப்போது வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது?

இதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி பதிலளித்தார். ஜூலை 12 ஆம் திகதி கப்பலுக்கு அனுமதி கோரப்பட்டதாகவும், ஜூலை 14 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதாகவும் அலி சப்ரி தெரிவித்தார். வெளியுறவுத்துறை அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அலி சப்ரி தெரிவித்தார். நாடு எரிந்து கொண்டிருந்த அந்த சில நாட்களுக்குள் இப்படியொரு கப்பலை வர அனுமதிப்பது குறித்து பிரமிதா கேள்வி எழுப்பியபோதும் சரியான பதில் கிடைக்கவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டாவால் பாதுகாப்பு அச்சுறுத்தல்: வெளியேற உத்தரவிட்ட சிங்கப்பூர்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சிங்கப்பூரில் தொடர்ந்து தங்கியிருந்தால் தமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கருதி அவரை சிங்கப்பூர் அரசாங்கம் வெளியேற்றியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்து கட்டடத்தை ஆக்கிரமித்ததன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மாளிகையை விட்டு தப்பிச் சென்றமை யாவரும் அறிந்ததே.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் யாரும் அறிந்து கொள்ளாத முடியாத இடத்தில் இரகசியமாக மறைந்திருந்த கோட்டாபய ராஜபக்ச, ஜூலை 11 ஆம் திகதி இலங்கை வான்படைக்கு சொந்தமான வானூர்தியில் மாலைதீவுக்கு சென்றார்.

இரண்டு நாட்களுக்கும் குறைவாகவே அவரால் அங்கு தங்க முடிந்தது. அவரது வருகைக்கு அந்நாட்டில் வாழும் இலங்கையை சேர்ந்தோரும் அங்குள்ள மக்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் அவர் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே, மாலைத்தீவு அரசின் தலையீட்டின் பேரில் சிறப்பு வானூர்தி மூலம் ஜூலை 14 ஆம் திகதி மாலைதீவிலிருந்து அவர் சிங்கப்பூர் சென்றார்.

சிங்கப்பூரில் 14 நாட்கள் மட்டுமே தங்க அவர் அனுமதிக்கப்பட்டார். அந்த நேரத்தில், சிங்கப்பூரில் இருந்தவாறே கோட்டாபய ராஜபக்ச வேறொரு நாட்டை தெரிவு செய்து அங்கு செல்வதற்கு வசதியாக அவரின் விசாவை மேலும் 14 நாட்களுக்கு அந்நாட்டு அரசு நீட்டித்தது. அதற்கு அப்பால், பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு அவரை மேலும் வைத்திருக்க சிங்கப்பூர் விரும்பவில்லை.

சிங்கப்பூர் தமிழர்கள் அதிகம் வாழும் நாடாக இருப்பதால் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்தும் அவருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே இலங்கை அரசு கேட்டுக்கொண்ட போதிலும் அவரது விசாவை நீடிக்க மறுத்து அவரை வெளியேறுமாறு சிங்கப்பூர் அரசு உத்தரவிட்டது எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் செஞ்சோலை படுகொலையின் 16ம் நினைவு நாள் அஞ்சலி

செஞ்சோலை படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் இன்று காலை 11:30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப்படங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்களால் சுடரேற்றி , மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியிலிருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் திகதி விமான படையினர் மேற்கொண்ட விமான குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர்.



# நாடாளுமன்றில் மதிய உணவு இடைவேளி 30 நிமிடங்களால் குறைப்பு

நாடாளுமன்றத்தில் மதிய உணவுக்காக ஒதுக்கப்படும் நேரத்தை அரை மணி நேரத்தால் குறைக்க நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மதிய உணவு இடைவேளைக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மின்கட்டண உயர்வு தீர்மானம் மீதான விவாதம் எதிர் வரும் 29 திகதி காலை 9:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை ஒத்திவைப்பு நேரத்தில் நடைபெறும்.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான விவாதம் எதிர்வரும் 30, 31, 1 மற்றும் 2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## இரண்டு சுதந்திரங்களை கடந்த இருதலை கொள்ளி எறும்புகள்

நாளை இந்தியக் குடிமக்கள் மாநிலங்களின் எல்லைகளைக் கடந்து இந்தியன் என்று கர்வம் கொள்ளும் திருநாள்.

ஆங்கிலேயர் பிடியிலிருந்து விடுதலை கண்டபோது பிரிந்து கிடந்த 556 சிற்றரசுகள் நாட்டுப்பற்றோடு கரம் கோர்த்ததால் பாடுபட்டு பெற்ற சுதந்திரம் பேரழகானது.இது அகிம்சையின் தேசம் எனும் அடைமொழியை அர்த்தமுள்ளதாக்கியது.

சுதந்திரத்தின் வாசலில் நின்றபொழுது சராசரி இந்திய குடிமகனின் ஆயுட்காலம் 32 வயது ஆகும் அது தற்போது 69 ஆக நீண்டிருக்கிறது. சுதந்திரத்தின் பின்னரான 75வருடங்களில் சுமார் 50 கோடி மக்கள் வறுமைக்கோட்டில் இருந்து மீட்கப்பட்டதை உலகவங்கி அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. எழுத்தறிவு வீதம் அதிகரித்தமை, சிசுமரணவீதம் குறைவடைந்தமை என்பவை வளர்ச்சிப்பாதையில் முக்கிய மைல்கற்களாகும்.

மருத்துவத்துறையில் இந்தியாவின் வளர்ச்சி அபரிமிதமானது.கொவிற் பெருந்தொற்று காலப் பகுதியில் உலக நாடுகளுக்கு இந்தியா வழங்கிய தடுப்பூசிகள் கணிசமானவை. தொழில்நுட்பத்துறையிலும் விண்வெளியிலும் இந்தியா தனது காலடித்தடங்களைச் சிறப்பாக பதிவு செய்திருக்கிறது.


மேற்கு நாட்டவரும் பார்த்து பிரம்மிக்கும் கலைகள் , பண்பாடு, ஆயுர்வேதம் என இந்திய பாரம்பரியங்களை மென்மேலும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனாலும் மனதை கனக்க செய்யும் ஒன்றை இலகுவில் கடந்து போக முடியவில்லை.பெருந்தோட்டங்களில் பணிபுரிய ஆங்கிலேயரால் அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளியினரை இந்த இடத்தில் நாம் நினைவு கூருதல் பொருத்தமானது. இரண்டு சுதந்திரங்களை கடந்தாலும் இருதலைக்கொள்ளி எறும்புகள் அவர்கள்!.உலகெங்கும் பரந்து வாழும் தமிழருவியின் இந்திய வாசகர்களுக்கு எமது சுதந்திர தின நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

### மூன்றே நாட்களில் விளைந்த முத்து

மூன்றே நாள் திட்டமிடலில் எமது கடின உழைப்போடு இந்த இந்திய சுதந்திரதின சிறப்பிதழை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெருமிதமடைகிறோம். மிகக்குறுகிய கால திட்டமிடலில் மிக சிறப்பாக ஒத்துழைத்த ஒப்பு நோக்குனர், பக்கவடிவமைப்பாளர், கட்டுரையாளர்கள், வாழ்த்துச்செய்திகளை வழங்கியோர், ஒருங்கிணைப்பில் உதவியோர் மற்றும் செய்திப்பிரிவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இனிய நெஞ்சங்களுடன் பயணிக்கையில் பாதைகள் கடினமில்லை. தொடர்ந்து பயணிப்போம்.

நேசங்களுடன்.
( ஆசிரியர் )



நன்றி: tamilmirrir

# அடிமைத்தளை அறுத்து அசுரவளர்ச்சி கண்ட தேசம்!

பவித்திரா

**இந்தியா** தனது 75 ஆவது சுதந்திர தின விழாவை நாளை கொண்டாட இருக்கிறது. இதனைச் சிறப்பாகக் கொண்டாட நாடே தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்த மாதம் தொடங்கியதில் இருந்து நாடே விழாக் கோலம் பூணத்தொடங்கி விட்டது. வீடு தோறும் கோடி ஏற்றுவது தங்கள் கலைத்திறனாலும் தொழில் முயற்சியாலும் மூவர்ணக்கொடியை வித்தியாசமாக உருவாக்குவது என்று இந்திய தேசமே களை கட்டிக்கொண்டு இருக்கிறது.

1947 இல் ஆகஸ்ட் 15ம் தேதி ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று சுதந்திர நாடாக உரிமை பெற்றதால் ஆண்டு தோறும் அந்த நாள் சுதந்திர தினமாகக் கொண்டப் படுகிறது.




சுதந்திர தினம் கொண்டாடாத நாடுகளும் உள்ளன. சுதந்திர தினம் இல்லாத நாடுகளா என்று யோசிக்கலாம். ஒரு நாடு வேறொரு நாட்டிற்கோ அரசுக்கோ கட்டுப்பட்டு இருந்து அதன் பிடியில் இருந்து விடுபட்டால் மட்டும் தான் விடுதலை தினம் என்று ஒன்று வரும். இந்த உலகில் உள்ள நாடுகளில் எல்லா நாடுகளும் காலனிகளாகவோ அடிமைகளாவோ இருக்கவில்லை. காலனி ஆதிக்கம் செலுத்தி வந்த நாடுகளும் தனி சுதந்திர மன்னராட்சிக்கு செய்து வந்த நாடுகளும் எப்போதுமே சுதந்திரமாகவே இருந்து வருகின்றன. அவ்வாறான பல நாடுகளையும் விஞ்சும் வகையில் இந்தியாவின் ஆபார வளர்ச்சி இன்று உலகின் பல நாடுகளையும் வியக்கவைக்கின்றது. இந்தியா உண்மையில் ஒரு பன்மைத்துவத்தைக்கொண்ட நாடு. பல இனங்கள், பல மதங்கள் அங்கு இருக்கின்ற போதிலும், அது ஒரு மதச்சார்பற்ற நாடாகவே இருக்கின்றது. இந்தியாவில் சிறுபான்மையின மக்களால் பேசப்படும் வங்காள மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகின்றது. சிறுபான்மையினரின் மதங்கள், மொழிகளை அங்கீகரித்ததுதான் இந்தியா என்ற நாட்டின் பலம்.



> சுதந்திர தினம் கொண்டாடாத நாடுகளும் உள்ளன. சுதந்திர தினம் இல்லாத நாடுகளா என்று யோசிக்கலாம். ஒரு நாடு வேறொரு நாட்டிற்கோ அரசுக்கோ கட்டுப்பட்டு இருந்து அதன் பிடியில் இருந்து விடுபட்டால் மட்டும் தான் விடுதலை தினம் என்று ஒன்று வரும். இந்த உலகில் உள்ள நாடுகளில் எல்லா நாடுகளும் காலனிகளாகவோ அடிமைகளாவோ இருக்கவில்லை. காலனி ஆதிக்கம் செலுத்தி வந்த நாடுகளும் தனி சுதந்திர மன்னராட்சிக்கு செய்து வந்த நாடுகளும் எப்போதுமே சுதந்திரமாகவே இருந்து வருகின்றன.

மிகுதி 21 ஆம் பக்கத்தில்...

## இந்திய செய்திகள்

# டெல்லி செங்கோட்டையில் பலத்த பாதுகாப்பு

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் குவிப்பு!

டெல்லி செங்கோட்டையில் நாளை நடைபெற உள்ள சுதந்திர தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியேற்ற உள்ளார். சுமார் 7 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ள இவ்விழாவையொட்டி, செங்கோட்டையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

75-வது சுதந்திர தினம் அமுதப் பெருவிழாவாக நாடு முழுவதும் கொண்டாடப்படும் என்று மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. இவ்விழாவை சிறப்பாகக் கொண்டாடுமாறு மாநில அரசுகளையும், மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

ஆகஸ்ட் 2-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை அனைவரும் சமூக ஊடக முகப்பு படங்களில் தேசியக் கொடியைப் பதிவேற்றுமாறு பிரதமர் மோடி அழைப்பு விடுத்திருந்தார். இதன்படி, பல்வேறு தரப்பினரும் சமூக ஊடக முகப்பில் தேசியக் கொடியை பதிவேற்றம் செய்துள்ளனர்.

மேலும், ஆகஸ்ட் 13 முதல் 15-ம் தேதி வரை வீடுகளில் தேசியக் கொடியைப் பறக்கவிடுமாறும் நாட்டு மக்களுக்கு பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். இதற்காக, தேசியக் கொடியை பறக்கவிடுவதற்கான விதிமுறைகளில் மத்திய அரசு சில திருத்தங்களை செய்தது,

குறிப்பாக, பகலில் மட்டுமே தேசியக் கொடி பறக்க வேண்டும் என்ற விதி மாற்றப்பட்டு, இரவிலும் பறக்க விடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



டெல்லி செங்கோட்டையில் நாளை நடைபெற உள்ள சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி தேசியக் கொடி ஏற்றிவைத்து, உரை நிகழ்த்த உள்ளார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்க மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகள் உட்பட சுமார் 7 ஆயிரம் பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டை முழுவதும் டெல்லி போலீஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, 10 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

செங்கோட்டையைச் சுற்றி 5 கி.மீ. சுற்றளவுக்கு வான் பகுதியில் பட்டம், ட்ரோன் போன்றவை பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்காணிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், டிஆர்டிஓ மற்றும் இதர பாதுகாப்பு முகமைகளின் உதவியுடன் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் போலீஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல் துறை உயரதிகாரி ஒருவர் கூறும்போது, செங்கோட்டையின் சுற்றுப்புறப் பகுதிக்குள் வருவோரைக் கண்காணிக்க நவீன சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. உணவு, தண்ணீர் பாட்டில், ரிமோட் கன்ட்ரோல் கார் சாவிகள், சிகரெட் லைட்டர்கள், சிறிய பெட்டிகள், கைப்பைகள், கேமராக்கள், பைனாகுலர்கள், குடைகள் உள்ளிட்டவற்றைக் கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

டெல்லி காவல்துறை சிறப்பு ஆணையர் தீபேந்திர பதக் (சட்டம்-ஒழுங்கு) கூறும்போது, டெல்லியில் ஏற்கெனவே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பட்டம், பலூன்கள், சீன ஒளிக்கூண்டு உள்ளிட்டவற்றை 15-ம் தேதி வரை பறக்கவிடுவோர் தண்டிக்கப்படுவர். வான் பகுதியில் எந்த ஒரு பொருளும் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்காணிக்க ராடார்கள் பொருத்தப்பட்டுள்ளன என்றார்.

### 75 வது சுதந்திர தினம்:

## விண்வெளியில் இருந்து இந்தியாவுக்கு வாழ்த்து!



இந்தியா 75-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்த வேளையில் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து இந்தியாவுக்கு வாழ்த்துச் செய்தி வந்துள்ளது. இத்தாலிய விண்வெளி வீராங்கணை சமந்தா கிறிஸ்டஃப்ரோட்டி விண்வெளியில் இருந்து ஒரு வாழ்த்து வீடியோவைப் பகிர்ந்துள்ளார்.

அதில் அவர், இந்தியா தனது 75-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில் இத்தாலிய விண்வெளி முகமை (ஐஎஸ்ஏ), அமெரிக்க விண்வெளி மையம் நாசா இன்னும் பல சர்வதேச கூட்டாளிகள் சார்பில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவுக்கு வாழ்த்து கூறுகிறேன். சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து வாழ்துகளைப் பகிர்கிறேன்.

பல ஆண்டுகளாக சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் பலவும் இஸ்ரோவுடன் இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்திற்கு இஸ்ரோ ஆயத்தமாகும் சூழலில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.


இந்திய வீடியோவை அமெரிக்காவுக்கான இந்திய தூதர் தரஞ்ஜித் சிங் சந்து தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் தந்தையாக அறியப்படும் விக்ரம் ஏ சாராபாயின் பிறந்தநாளில் அவர் இந்த வீடியோவைப் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

# அகில இந்திய வானொலியின் முதல் தமிழ் செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி மறைவு

இந்தியாவின் பிரபல செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி உடல்நலக்குறைவால் நேற்று மரணமடைந்தார். அவருக்கு வயது 87.

ஆகாசவானி வானொலி செய்திகளில் 1980, 90களில் தமிழர்களை வசீகரித்த குரலுக்கு சொந்தக்காரர் இந்த சரோஜ் நாராயணசுவாமி. ஆகாசவானி வானொலியில் தினமும் காலை 7.15 மணிக்கு ஒலிக்கும் அவரின் குரல் மூலமே உலக நடப்புகளை அறிந்த தமிழர்கள் ஏராளம். தமிழத்தின் நெற்



களஞ்சியமான தஞ்சாவூரில் பிறந்து, இந்தியாவின் வர்த்தக தலைநகரான மும்பையில் படித்து வளர்ந்தார் சரோஜ் நாராயணசுவாமி.

ஆங்கிலத்தில் இளங்கலை பட்டம் பெற்ற சரோஜ் நாராயணசுவாமி, தாய் மொழியான தமிழில் நல்ல புலமையுடன் திகழ்ந்தார். திருமணத்துக்கு பின்பே வானொலி பணியில் இணைந்து அதற்காக மும்பையில் இருந்து டெல்லிக்கும் குடியேறினார். பல பெண்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்த இவர், முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், நரசிம்மராவ் உள்ளிட்டோரை நேர்காணல் செய்துள்ளார்.

1962ல் வானொலி பணியில் சேர்ந்த சரோஜ் நாராயணசுவாமி, அந்த பணியில் சுமார் 35 ஆண்டுகாலம் தமிழ் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்த அனுபவம் கொண்டுள்ளார். அகில இந்திய வானொலியின் முதல் தமிழ் செய்தி வாசிப்பாளர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரர்.

ஒலிபரப்புத்துறையில் அவரின் சாதனைகளை பாராட்டி 2008ல் தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கி கௌரவித்தது. பணி ஓய்வுக்கு பின் தான் வளர்ந்த நகரமான மும்பையில் வசித்து வந்த அவர் இன்று காலமானார்.

## ராஜஸ்தானில் ஒரு கோடி மாணவர்கள் தேசபக்தி பாடல்கள் பாடி உலக சாதனை

நமது நாட்டின் 75-வது சுதந்திர தினம் இந்த ஆண்டு சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் ஒரு கோடி மாணவர்கள் நேற்று ஒன்று கூடி தேசபக்தி பாடல்களை பாடி உலக சாதனை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று ஒரு கோடி மாணவர்கள் 25 நிமிட நேரம் வந்தே மாதரம், சரே ஜஹான் சே ஆச்சா, தேசிய கீதம் உள்ளிட்ட தேசபக்தி பாடல்களைப் பாடி



னார்கள். இது உலக சாதனையாக நேற்று பதிவாகி உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பாடிய மாணவர்களுக்கு முதல்-மந்திரி அசோக் கெலாட் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில், 'லண்டனில் உள்ள புகழ் பெற்ற நிறுவனமான'வேர்ல்ட் புக் ஆப் ரெகார்ட்ஸ்', ஒரு கோடி மாணவர்கள் பாடிய பாடல்களைக் கேட்டு, மாநில அரசிடம் சான்றிதழை வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன்' என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது, 'புதிய தலைமுறையினர் சகோதரத்துவம், தியாகம் ஆகிய விழுமியங்களைப் புகுத்த வேண்டும், அதுவே நாட்டின் எதிர்காலம் ஆகும்' என தெரிவித்தார்.

## சுதந்திர தினத்தன்று பெங்களூரில் அரசுப் பேருந்துகளில் மக்கள் இலவசமாக பயணிக்கலாம்

நாட்டின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெங்களூரில் அரசுப் பேருந்துகளில் பொதுமக்கள் இலவசமாக பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெங்களூர் மாநகர போக்குவரத்து கழகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது

நாட்டின் 75-வது சுதந்திர தினம் மற்றும் பெங்களூர் மாநகர போக்குவரத்து கழகத்தின் 25-ம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு போக்குவரத்து ஊழியர்கள், பொதுமக்களை ஊக்குவிக்க பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுவரை விபத்தை ஏற்படுத்தாத ஓட்டுநர், பணியில் சிறப்பாக செயல்பட்ட நடத்துனர் உள்ளிட்ட 150 பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறது.

ஆகஸ்ட் 15ம் தேதி அதிகாலை 4 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் பொதுமக்கள் இலவசமாக பயணிக்கலாம். குறிப்பாக பெங்களூரில் உள்ள சுற்றுலா தலங்கள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் ஆகியவற்றை சென்று காணலாம். இந்த இலவச பயண வசதி சாதாரண, குளிர்சாதன, சிறப்பு வால்வோ பேருந்துகளுக்கும் பொருந்தும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## தமிழ்நாட்டு செய்திகள்
### வணக்கம் தமிழகம்

## சுதந்திர தினமன்று 200 தி.மு.க. நிர்வாகிகள் திடீர் ராஜினாமா முடிவு!

### தி.மு.க.தலைமை அதிர்ச்சி



டிஆர்பி ராஜாவால் அதிருப்தி அடைந்த 200 திமுக நிர்வாகிகள் ராஜினாமா செய்ய விருப்பதாக அதிரடியாக அறிவித்துள்ளனர். மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் தாயார் சமாதி முன்பாக இந்த ராஜினாமா கடிதத்தினை சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

திமுக உட்கட்சித் தேர்தலில் திருவாரூர் மாவட்ட ஒன்றியங்களுக்கு நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அறிவிப்பில் நீடாமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளராக ஆனந்த் என்பவர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தலைமை அறிவித்திருக்கிறது.

மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டிஆர்பி ராஜாவின் ஆதரவாளர் தான் ஆனந்த். ஆனால் நீடாமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் வாக்களிக்க தகுதியுள்ள 280 திமுக பொறுப்பாளர்களில் அண்ணாதுரை என்பவருக்கு 216 பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அப்படி இருக்கும் போது டிஆர்பி ராஜா பரிந்துரையின் பேரில் ஆனந்த் என்பவரை நீடாமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளராக தலைமை அறிவித்திருக்கிறது. இதனால் திமுகவின் தலைமைக்கு எதிராக கூட்டம் கூடப்பட்டு அதில் திமுக தலைமை ஆனந்த் அறிவிப்பினை திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள்.

அப்படி திரும்பப் பெறவில்லை என்றால் அண்ணாதுரை ஆதரவாளர்களான நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் மூன்று பேர் , ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆறு பேர் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஒன்றிய பிரதிநிதி கலைக்கழகச் செயலாளர்கள் என 200க்கும் மேற்பட்டோர் தங்கள் பதவியை நாளை மறுதினம் ராஜினாமா செய்யவிருக்கிறார்கள்.

மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் தாயார் சமாதி அமைந்திருக்கும் திருவாரூர் காட்டூருக்கு சென்று அங்கே சமாதி முன்பாக ராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்க போவதாக அறிவித்துள்ளனர்.

## மெரினா கடற்கரையில் சுதந்திரதின கொண்டாட்டங்கள்

### 75 வீணைக்கலைஞர்கள் பங்கேற்பு



புதுச்சேரி மேரினா வம்பா கீரப்பாளையத்தில் உள்ள மெரினா கடற்கரையில் சுதந்திர தின அமுதப் பெருவிழாவை முன்னிட்டு நேற்று வீணை இசை நிகழ்ச்சி நடைபெற்றது.டாக்டர் சுகுமார் தலைமையில் 75 வீணை இசைக்கலைஞர்கள் இதில் பங்கேற்று, கர்நாடக சங்கீதம் மற்றும் பக்தி பாடல்கள் இசைத்தனர்.

ஏராளமான பார்வையாளர்கள் இந்நிகழ்ச்சியை கண்டு ரசித்தனர். மெரினாவில் இன்று மாலை 6:00 மணிக்கு கிராமிய கலை நிகழ்ச்சி, நாளை 15ம் திகதி காலை 8:00 மணிக்கு மூவர்ண கொடியேற்றுதல், மாலை 6:00 மணிக்கு பரத நாட்டிய நிகழ்ச்சி என்பவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 75 வது சுதந்திர தின கொண்டாட்டம்;

## தமிழகத்தில் 1 லட்சம் போலீஸ் பாதுகாப்பு

நாடு முழுவதும் 75-வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன. மக்கள் வீடுகள் தோறும் தேசிய கொடிகளை ஏற்றியுள்ளனர்.

சுதந்திர தின கொண்டாட்டங்களை சீர் குலைக்கும் வகையில் பயங்கரவாதிகள் சதி திட்டத்தில் ஈடுபடலாம் என்றும், எனவே மாநில அரசுகள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்றும் மத்திய உளவுப் பிரிவு அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர். இதையடுத்து அனைத்து மாநிலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு உள்ளன.

தமிழகத்தில் 1 லட்சத்துக்கும் அதிகமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் சுதந்திர தின கொண்டாட்டத்தையொட்டி தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். இதற்கான உத்தரவை டி.ஜி.பி. சைலேந்திரபாபு பிறப்பித்து உள்ளார்.



இதைத் தொடர்ந்து கும்மிடிப்பூண்டி முதல் கன்னியாகுமரி வரை போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் அதிகம் கூடும் இடங்களான பஸ், ரெயில் நிலையங்கள், கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் போலீஸ் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது.

ரெயில்வே தண்டவாளங்கள், கோவில்களை சுற்றி உள்ள இடங்கள் மார்க்கெட்டுகள் உள்ளிட்ட பகுதிகளில் வெடிகுண்டு சோதனையும் நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து முக்கிய சந்திப்புகளிலும் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த சோதனையின் போது சந்தேக நபர்களை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். சந்தேக நபர்களின் முகவரிகளை வாங்கி அவர்கள் பற்றிய முழு தகவல்களையும் போலீசார் திரட்டி விசாரித்து வருகிறார்கள்.

## பாட புத்தகங்களில் சுதந்திரபோராட்ட வரலாறு மறைப்பு

### அண்ணாமலை காட்டம்!

'தமிழக பாட புத்தகங்களில் சுதந்திர போராட்ட வரலாறு மறைக்கப்பட்டுள்ளது' என, பா.ஜ., மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரில் நடந்த சுதந்திர தின அமுத பெருவிழாவில் அவர் கூறியதாவது:

சரித்திரப் புகழ் பெற்ற இடத்தில் இன்று இருக்கிறோம். கடந்த, 1801ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதல் போர் பிரகடனம் செய்தவர்கள் பெரிய மருது, சின்ன மருது என்ற இரண்டு தமிழர்கள்.வீரம் நிறைந்த இந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள். ஆங்கிலேயர்



கள் இந்த நாட்டை ஆள தகுதியற்றவர்கள் என, உரிமைக்கு குரல் கொடுத்தவர்கள்.பாளையக்காரர்களாக இருந்தாலும், ஸ்ரீரங்கம் கோட்டை கதவில் போர் பிரகடனத்தை ஒட்டி துணிந்து எதிர்த்து போரிட்டவர்கள்.நாட்டின், 75 வது சுதந்திர தினம் இடம் பெற்று கொண்டிருக்கிறது.

மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட, சிறை பிடிக்கப்பட்ட நினைவிடமான இங்கு வந்து அஞ்சலி செலுத்தியுள்ளோம்.இவர்கள் குறித்த வரலாறு பாடப்புத்தகத்தில் மறைக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பற்றி நமது குழந்தைகளுக்கு எந்தளவு தெரியப்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு அவர்கள் நல்ல மனிதர்களாக வளர்வர்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களைகட்டுகிறது சிவகங்கையில் தேசியக்கொடி தயாரிப்பு

### இந்தியக்கொடியை தயாரிப்பதில் இஸ்லாமிய பெண்கள் பெருமிதம்!

இந்திய நாட்டின் 75-வது சுதந்திர தினம் உற்சாகமாகக் கொண்டாடப்பட உள்ள நிலையில், தேசியக்கொடி தயாரிப்பது பெருமையாக இருப்பதாக சிவகங்கையில் இஸ்லாமிய பெண்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் 75-வது சுதந்திர தினம் நாளை நாடு முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட உள்ளது. இந்த மகத்தான தினத்தை விமர்சையாக கொண்டாட மத்திய - மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடி, கடந்த மாதம் 'Har Ghar Tiranga' (ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக் கொடி) என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ், நேற்று முதல் 15 வரை ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக் கொடியைப் பறக்கவிட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியிருந்தார். அதன்படி வீடுகளில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சிவகங்கை அருகே ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க தேசிய கொடி தயாரிக்கும் பணியில் மகளிர் குழுவினர் ஈடுபட்டுவரும் நிலையில், இதில் தங்களது பங்களிப்பை அதிகம் செலுத்திவரும் இஸ்லாமிய சகோதரிகள், இந்த பணியில் ஈடுபடுவதற்கு பெருமை கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

சிவகங்கை அருகே வுள்ள சக்கந்தி ஊராட்சியில் தேசிய ரூர்பன் திட்டம் மூலம் மகளிர் குழுவினர் இணைந்து ஆயத்த ஆடை தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஊராட்சியில் இஸ்லாமிய சமூக மக்கள் அதிகம் வசிக்கும் சூழலில், இந்த மகளிர் குழுவில் அதிகம் இஸ்லாமிய பெண்களே பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் இல்லங்களில் தேசிய கொடியை ஏற்றி தேசப்பற்றை காட்டும் விதமாக, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தேசிய கொடியை வீடுகளுக்கு வழங்கும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, தேசிய கொடி தயாரிக்கும் பணியை அந்தந்த ஊராட்சிகளில் உள்ள மகளிர் குழுக்களே செய்தும் வருகின்றனர்.

அந்த வகையில், இந்த சக்கந்தி ஊராட்சியிலும் அந்த பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் 20 க்கும் மேற்பட்ட பெண்கள் ஈடுபட்டுவரும் நிலையில் 70 சதவீதம் இஸ்லாமிய பெண்களே தங்களது பங்களிப்பை தந்து கொடிகளை தயாரித்து வருகின்றனர்.

இந்த பணியில் ஈடுபடுவது தங்களுக்கு பெருமையளிப்பதாகவும், சுதந்திர போராட்டத்தில் தங்களின் பங்களிப்பு இருந்ததைபோல், 75 வது சுதந்திர தினத்திலும் தங்களது பங்களிப்பு இருப்பது பெருமை என்றும், இது மிகுந்த சந்தோஷத்தை அளிப்பதாகவும் இஸ்லாமிய சகோதரிகள் பெருமிதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# இஸ்ரேல் பாலஸ்தீன முரண்பாட்டில் அமெரிக்காவின் மௌனம்

## சர்வதேச அமைப்புகள் அதிருப்தி



இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது வான் தாக்குதல்களை பெருமெடுப்பில் மேற்கொண்டு வருகின்றது. இதனால் பாலஸ்தீன பொது மக்கள் அதிகளவில் உயிரிழப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து அமெரிக்கா எதுவும் கூறாது வேறு விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றமை அவதானிக்கப்படுகின்றது. அமெரிக்கா தனது நாட்டின் பண வீக்கம் தொடர்பிலும், உக்ரைனின் போர் நிலவரம் தொடர்பிலும் அதிக அக்கறை எடுத்து செயல்பட்டு வருகின்றமையானது சர்வதேசத்தின் அவதானத்தை திருப்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பாலஸ்தீன போர் மூளுவதற்கு பாலஸ்தீனத்தின் 'ஹமாஸ்' அமைப்புக்களே காரணம் எனவும் இதனால் தற்போது பாலஸ்தீனத்தின் 'ஹமாஸ்' அமைப்புக்கள் உட்பட முழு பாலஸ்தீனமுமே பலவீனமான நிலையில் காணப்படுவதாகவும், இந்த நிலைமையை பயன்படுத்தி பாலஸ்தீனத்தின் மீது சர்வதேச தடைகளை அமெரிக்கா பிரயோகிக்க வேண்டும் எனவும் அறிக்கைகள் விடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சல்மான் ருஷ்டிக்கு கத்திக்குத்து

## தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதி



நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அடையாளம் தெரியாத நபரால் கத்தியால் குத்தப்பட்ட பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி வென்டிலேட்டரில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பேச முடியாத நிலையில் இருப்பதாகவும், கண் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது முகவர் தெரிவித்துள்ளார்.

சாத்தானின் வசனங்கள் என்ற புத்தகத்தை எழுதிய பின்னர் பல ஆண்டுகளாக மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வந்த எழுத்தாளர் சல்மான் ருஷ்டி நியூயார்க்கில் ஒரு மேடையில் வைத்து கத்தியால் குத்தப்பட்டு தாக்கப்பட்டார்.

புக்கர் பரிசு வென்றவரான இவர், லாப நோக்கற்ற ஷட்டாக்குவா நிறுவன நிகழ்வில் விரிவுரையாற்றிக் கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு ஆளானார்.

# மொண்டி நீக்ரோ நாட்டில் துப்பாக்கிதாரி தாண்டவம்!



பால்கன்ஸ் பிராந்திய நாடுகளில் ஒன்றான 'மொண்டிநீக்ரோ' நாட்டின் செடின்ஜேவின் என்னும் நகரில் துப்பாக்கிதாரி ஒருவர் திடீரென மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 13 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகில் அமைதியான நாடுகளில் ஒன்றான 'மொண்டிநீக்ரோ' நாட்டில் இவ்வாறான சம்பவம் நடந்திருக்கின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

காயமடைந்தவர்களுள் காவல்துறை அதிகாரியும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிதாரி 34 வயதுடையவர் என்றும் தாக்குதலுக்கான காரணத்தை உடன் அறிய முடியவில்லை என்றும், விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் ஆட்சிக்கு ஒரு வருடம் பூர்த்தி!



அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளிடம் இருந்து ஆப்கானிஸ்தானின் காபூலை தலிபான்கள் முற்றும் கைவசப்படுத்தி எதிர்வரும் 15ம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

இந்த நிலையில் கடந்த தலிபான்களின் ஒரு வருட ஆட்சியில் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், உலகில் மனித உரிமைகள் தொடர்பில் பணியாற்றிய இடங்களில் மிகுந்த நெருக்கடிகளை சந்தித்த ஒரு நாடு என்றால் அது ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் ஆட்சி என தெரிவித்துள்ளது.

குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடயத்தில் தலிபான்கள் மனித உரிமை மீறல்களை தமது இஸ்லாமிய சமய கொள்கைகளுக்குட்படுத்தி அதனை மக்கள் மீது திணித்து அடக்கு முறைகளை மேற்கொண்டதாகவும், இதனால் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் ஆப்கானிஸ்தானில் இல்லாமல் செய்யப்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக தலிபான்கள் உலக நாடுகளுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளமையும் சிறிது சிறிதாக பெண்களுக்கான உரிமைகளை தலிபான்கள் கொடுத்து வருவதாகவும் அண்மைக்கால செய்திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவின் தாக்குதலில் இருந்து முற்றும் விடுபட்டுள்ளதாக வடகொரியா அறிவிப்பு!



கடந்த சில மாதங்களாக கொரோனாவின் அதி வேக தாக்குதலுக்குட்பட்டு அவதியுற்றிருந்த வடகொரியா தற்போது பூரண விடுதலையை பெற்றுள்ளதாகவும், கொரோனா பரிசோதனைகள் மற்றும் முகக் கவசம் போன்றவற்றில் இருந்து விடுபட்டுள்ளதாகவும் வடகொரியாவின் தலைவர் கிம் யோங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவில் இதுவரை கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை வடகொரிய அறிவிக்கவில்லையாயினும் சர்வதேச ஊடகங்களின் மதிப்பின் படி குறைந்தது 4.77 மில்லியன் மக்கள் கோரோனாவினால் பாதிக்கப்பட்டு இருக்கக் கூடும் என தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் நேற்றைய தினம் தலைவர் கிம் யோங் யுன் கோரோனாவின் தாக்கம் பூச்சிய நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இருப்பதை உறுதிப்படுத்தியதுடன் கொரோனாவின் அனைத்து கட்டுப்பாடுகளையும் வடகொரியா நீக்கிக் கொள்வதாகவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





சி.ரஞ்சிதா

# இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் வகிபாகம்

**அந்தியர்** ஆட்சி கீழைத்தேசத்தில் வேரூன்றியதும் அடிமைத் தலையில் மக்கள் வாழ்ந்ததும் பின்னர் நாட்டு விடுதலைக்காக சுதேசிகள் திரண்டு எழுந்ததும் 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்திய நாடு விடுதலை அடைந்தம் வரலாறு சொல்லும் கதை. எமது கீழைத்தேயக் கலாசார வாழ்வில் பெண் கல்வி, பெண் உரிமை மறுக்கப்பட்டு பாரிய அளவு விடுதலை பெறாத காலப்பகுதியில் பெண்கள் பலர் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தமது பங்களிப்பை நல்கியிருக்கின்றனர் என்பது பெரும் ஆச்சரியம் அளிக்கின்றது. அரசியல் அதிகாரம், கல்விப் பின்னணி, சமூக மதிப்பு கொண்ட பெண்களே அதிகமாக இந்திய விடுதலைக்காக போராடியதை வரலாற்று தகவல்களூடாக அறியமுடிகின்றது. டாக்டர் ருக்மணி லக்சுமிபதி, அம்புஜத்தம்மாள், லட்சுமி சாகல், வை.மு.கோதைநாயகி, வேலுநாச்சியார் எனப் பல பெண்களைச் சுட்டிக்காட்டலாம். இந்தக் கட்டுரையில் வேலுநாச்சியார், லட்சுமி சாகல் , ருக்மணி லட்சுமிபதி, அன்னி பெசண்ட் அம்மையார் ஆகிய பெண் ஆளுமைகள் இந்திய விடுதலைக்காக எவ்வாறான பங்களிப்புகளை வழங்கினர் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வேலுநாச்சியார்

வேலுநாச்சியார் என்ற இயற்பெயரைக் கொண்ட ஜான்சிராணி 1730 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சமஸ்தான மன்னர் செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதிக்கும் முத்தாள் நாச்சியாருக்கும் மகளாகப் பிறந்தார். ஆண் வாரிசு இல்லாததால் ஆண் போல வளர்க்கப்பட்ட வேலுநாச்சியார் ஆயுதப்பயிற்சிகளைப் பெற்றதோடு பல மொழிகளையும் கற்றுக் கொண்டார். பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனிக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடியதுடன் இந்தியாவின் முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனை என்ற பெருமையையும் கொண்டவர் இவரே.

சிவகங்கைச் சீமை மன்னர் முத்து வடுகநாதத் தேவரைத் திருமணம் செய்த வேலுநாச்சியார் 1772 இல் ஐரோப்பியரின் படையெடுப்பால் கணவரையும் இழந்தார். கணவனை இழந்ததிற்காக துவண்டு போகாமல் நாட்டை மீட்டெடுப்பதற்காக அயராது பாடுபட்ட இந்த வீரப் பெண்மணி ஏழாண்டு காலமாக விருப்பாட்சிக் கோட்டை, திண்டுக்கல் கோட்டை, அய்யம்பாளையம் கோட்டை என இடம் மாறி முகாமிட்டு வாழ்ந்து வந்தார். மைசூரை ஆண்ட ஹைதர் அலி, மருது சகோததரர்களின் உதவியோடு வேலுநாச்சியார் சிவகங்கை மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்பு போராட்டித்திலும் ஈடுபட்டார். ஏழு ஆண்டுகள் இடைவிடாது நடத்திய யுத்தத்தின் பின்னரே ஆங்கிலேயரிடமிருந்து சிவகங்கையை மீட்டு எடுத்தார். ராணி வேலு நாட்சியார் தனது கணவரைத் தொடர்ந்து கி.பி.1789 வரை சிவகங்கையை ஆட்சிபுரிந்தார். வட இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக போர் நடத்திய முதல் பெண் என்ற பெருமையை இவர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலட்சுமி சாகல்

கேப்டன் இலட்சுமி சாகல் 1943 இல் நேதாஜியால் தொடங்கப்பெற்ற இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் பிரிவான ஜான்சிராணிப்படைப் பிரிவின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர். இவர் ராணி மேரி கல்லூரியில் பயிலும் போது கதர் மட்டுமே அணியும் தீவிர காங்கிரசு இளைஞர் அணியில் உறுப்பினரானார். 1930 ஆம் ஆண்டில் அறப்போராட்டத்தில் ஈடுபட்டதற்காக மறியலிலும் அடைக்கப்பட்டார். மருத்துவரான இலட்சுமி சாகல் இந்திய சுதந்திர லீகின் பிரச்சாரப் பிரிவின் சார்பில் இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதினார். இந்தியாவுக்கு வானொலி மூலம் செய்திகளை ஒலிபரப்பும் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1945 இல் இந்திய தேசிய ராணுவ வீரர்கள் ஓரிடத்தில் கூடிய போது இன்னும் போர் முடிவடையவில்லை. நாம் இந்தியாவுக்குள் அடிவைத்து விடுதலை இலட்சியம் நிறைவேற்றும் வரை போராடுவோம். என்று இலட்சுமி பாய் முழங்கியதையடுத்து இச்செய்தி பிரித்தானிய இராணுவத் தலைமைக்கு எட்டியது. உடனே லட்சுமியைக் கைது செய்து கலாப் என்ற இடத்தில் வைத்தனர். இவ்வாறு இந்திய விடுதலைக்காக பல வழிகளில் போராடியதோடு பல இன்னல்களையும் இவர் அனுபவித்தார்.


அன்னி பெசண்ட் அம்மையார்


ருக்மணி லட்சுமிபதி


லட்சுமி சாகல்


வேலுநாச்சியார்



## ருக்மணி லட்சுமிபதி

இந்திய சுதந்திர போராட்ட வீராங்கனையும் இந்திய தேசிய காங்கிரசு அரசியல்வாதியும்

மிகுதி 06 ஆம் பக்கத்தில்...



# இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் வகிபாகம்






சி.ரஞ்சிதா

வீணை இசைக்கலைஞரும் சென்னை மாகாணத்தின் முதல் பெண் அமைச்சருமாவார். ருக்மணி 1923 இல் காங்கிரசில் சேர்ந்தார். 1930 இல் வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டதற்காக ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டார். உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தில் சிறை சென்ற முதல் பெண்ணும் இவரே. ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட போது உப்புக் குவியலின் மீது படுத்துக் கொண்டு சிறிதும் அசையாமல் செய்த அறப்போர் அனைவரையும் வியப்படையச்செய்தததாக வரலாற்று தகவல்களினூடாக காணமுடிகின்றது. ருக்மணி இந்திய விடுதலையில் நாட்டம் கொண்டதோடு மட்டுமன்றி தாமும் தமது குழந்தைகளும் கணவரும் கதராடையே அணிந்தனர்.

அரசின் உயர் பதவிகளில் வெள்ளையர்களையே அமர்த்துவது என்பது கர்ஸன் பிரபு காலத்திலிருந்தது. ருக்மணி அமைச்சராகப் பதவியேற்ற காலப்பகுதியில் இந்திய அரசுப்பிணிகளில் இந்தியர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் காங்கிரசின் கொள்கையாக மாற்றினார். இந்திய விடுதலை போரின்போது இந்தியாவின் பல்வேறு சமூக இயக்கங்களும், மறுமலர்ச்சி இயக்கங்களும் தோன்றி வளர்ந்த போது இவ் இயக்கங்களுடன் தம்மை இணைத்துக்கொண்டு செயல்பட்டார்.

ஜவகர்லால் நேருவின் வேண்டுகோளுக்கு இணங்க ருக்மணி லட்சுமிபதி தமிழகத்தில் ‘வானரப்படை’ என்றழைக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேசபக்த அமைப்பை 1931 இல் நிறுவியமையும் குறிப்பிடத்தக்கது.

## அன்னி பெசண்ட்

இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவராதலால் ஆங்கிலேய அரசின் அடக்குமுறைகளால் மிகவும் பாதிப்படைந்திருந்தார். விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக காமன் வீல் என்ற வாரப்பத்திரிகையை 1914 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 1915 இல் சென்னையில் நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்தார். இதன் மூலம் அரசியலுக்குள்ளும் இழுக்கப்பட்டார்.

1907-ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம் மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து, லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னி பெசண்ட் தனது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார்.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங்கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜுன் 15 ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அறிவித்தது. இதனால் நிலைகுலைந்த ஆங்கிலேய அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது.

டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். லாகூரில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் 1929 இல் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சி கோரி அறிக்கை வெளியானது. காங்கிரஸ் சோசலிச சார்பாக கருத்துக்களை வெளியிட்டமை அன்னி பெசண்டின் கொள்கைகளுக்கு உரியதாக இருக்க வில்லை. இதனால் அவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கங்களில் சேரவில்லை. காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன்போலவே ஈடுபாடு காட்டி வந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றினார். 1929 இல் ‘பொதுநலவாய இந்தியா’ என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக ஆண்கள் மட்டுமன்றி துணிகரமான பெண்களும் தமது பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்பதை மேற்படி வரலாற்று தகவல்கள் உறுதி செய்கின்றன. பெண்கள் தானே என்றும் எதற்கு வீண் முயற்சி என்றும் உயிர் முக்கியம் என்றும் எண்ணாது நாட்டின் மீதான தீவிர பக்தியின் விழைவால் இப்பெண்கள் தம்மை பல்வேறு விடுதலை இயக்கங்களோடு இணைத்துக்கொண்டு தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்கி இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் பெயர் பதித்துள்ளமையை மகிழ்வோடு நினைவுக்கூர முடிகின்றது.

“இந்திய நாட்டின் விடுதலைக்காக ஆண்கள் மட்டுமன்றி துணிகரமான பெண்களும் தமது பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்பதை மேற்படி வரலாற்று தகவல்கள் உறுதி செய்கின்றன. பெண்கள் தானே என்றும். எதற்கு வீண் முயற்சி என்றும் உயிர் முக்கியம் என்றும் எண்ணாது நாட்டின் மீதான தீவிர பக்தியின் விழைவால் இப்பெண்கள் தம்மை பல்வேறு விடுதலை இயக்கங்களோடு இணைத்துக் கொண்டு தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்கி இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் பெயர் பதித்துள்ளமையை மகிழ்வோடு நினைவுக்கூர முடிகின்றது.”





புஸ்பராசா
கோபிகா

# பாரதியார் கவிதைகளில் வெளிப்படும் சுதந்திர வேட்கை



**இருளடைந்த** இந்தியத் திருநாட்டிற்கு பேரொளி தரவென செந்தமிழ்ப்பாவலன் பாரதியார் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் அதாவது 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் உதித்தார். இவர் வாழ்ந்த காலத்தில் இந்திய மக்கள் ஆங்கிலேயரின் காலணித்துவத்திற்கு உட்பட்டு பல இன்னல்களைச் சந்தித்து வந்தனர். 'வந்தோரை வாழவைக்கும் நாடு.' என்ற பெருமை பெற்ற இந்திய தேசமானது ஆங்கிலேயர்களை வணிகம் செய்வதற்கென நாட்டிற்குள் அனுமதித்தனர். ஆனால் பிரித்தானியர் தமது பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்த தொடங்கினர். இந்நிலையில் ஆங்கிலேயரின் ஆட்சி நிலைபெற்று விட்டதை உணர்ந்த இந்தியர்கள் ஆங்கிலேயர்கள் பூட்டிய அடிமை விலங்கை உடைத்தெறிய பல போராட்டங்களில் ஈடுபட்டனர். அவற்றில் ஒன்றே பாரதியார் கடைப்பிடித்த வழி.அதாவது தனது எழுச்சிமிகு கவிதைகளால் மக்களை கிளர்ந்தெழச் செய்தாகும்.

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்? என்றெம தன்னகை விலங்குகள் போகும்? என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?' என்றவாறாக புரட்சிகரமான கேள்விகளை தமது கவிதைகளில் நிரப்பி வீர சுதந்திரம் வேண்டி போராடினார். இவ்வாறாக அனைவராலும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமை, இனிமை, புதுமை நிறைந்த பாக்களை இயற்றி மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வை ஏற்படுத்தினார். சுதந்திர போராட்டத்தில் அவர் ஆற்றிய பெரும் பங்களிப்பை நோக்குவோம் .

பாரதியின் காலகட்டத்திலே கவிதைகளின் பரப்பளவு சமூக நோக்கத்தில் விரிவடைந்தது எனக் கூறலாம். எதுவித தொலை நோக்குமற்று கவிதைகளைப் படிக்கும் நிலை மாறி, கவிதைகள் வாயிலாக விழிப்புணர்வும், சமூக உணர்வும் நாட்டுப் பற்று மிகுந்து வரும் அளவிற்கு கவிகள் எழுதப்பட்டன. பாரதத்தையே பாரத தேவியாக கொண்டு கவிதை பாடினார். அந்த வகையில் பாரதத்தின் சிறப்புத்தனை கூறிய அவர், 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு.' என்றும், பழம் பாரதத்தை 'ஞானத்திலே, பர மோனத்திலே, உயர் மானத்திலே ,அன்னதானத்திலே உயர்ந்த நாடு.' எனப் பொழிந்து பெருமிதம் அடைந்த அதே நேரத்தில், அவர் காலத்தில் அடிமைப் பட்டிருந்த பாரதத்தை எண்ணி, 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்..' எனக்கூறி மனம் வேதனை அடைந்தார்.

இந்நிலையிலேயே பாரதம் இழந்த பெருமையை மீளக் கட்டியெழுப்பவும், தாழ்வுற்ற நிலையிலிருந்து தலைநிமிர்ந்திடவுமென, 'இதற்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப் பட்டாலும், பதந்திரு இரண்டும் மாறிப்பழி மிகுந்திழிவுற்றாலும், விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும், சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே.'

என்ற பா மூலம் மக்களிடையே விடுதலை வேட்கையை உருவாக்கினர்.



> கவிதைகள் வாயிலாக மாத்திரமன்றி இதழியல் பணியை மேற்கொண்டு வந்த நிலையில், அதனூடாகவும் விடுதலைப் போராட்ட உணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். அதாவது ஆங்கிலேயர்களின் கெடுபிடியால் விடுதலை வேட்கை ஊட்டும் கருத்துக்கள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என எண்ணியவர் பல புனைப்பெயர்களிலும் கட்டுரைகள் எழுதினார்

இந்திய நாடானது அந்நியரிடம் அடிமைப்பட்டிருப்பதை விடுத்து, ஒரு நாட்டு மக்களே தம்மிடையே ஜாதி,மதம், நிறம் என்ற ரீதியில் வேறுபட்டிருப்பதை கண்டு மனங்கலங்கினார். இந்நிலையில் எப்படி அந்நியரிடமிருந்து சுதந்திர விடுதலை பெற முடியுரி என்பதை மக்களுக்கு உணர்த்த எண்ணி,

'ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்- அன்னியர் வந்து புகல் என்ன நீதி?' என்று பாடி மக்களின் அறியாமை எனும் இருளை அகற்றினார்.

மக்கள் மத்தியிலே முதலில் ஒற்றுமை உணர்வை விதைக்க வேண்டும் என்பதை உணர்ந்த பாரதி தனது கவிதைகளை அதற்கேற்ற வகையில் வடிக்கத் தொடங்கினார். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.' என்று பாடி மக்கள் மத்தியில் விடுதலைத் தாகத்தை ஏற்படுத்தினார். அதுபோல,

'தண்ணீர் விட்டா வளர்த்தோம் சருவேசா, கண்ணீரால் காத்தோம், கருகத் திருவுளமோ.' என்ற கவி மூலமாக சுதந்திரப் பயிரை கண்ணீராலும்,செந்நீராலும் காக்க வேண்டும் என்கிறார்.

'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்,எல்லோரும் இந்திய மக்கள்; எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்.' எனப் பாடி உயர்வு,தாழ்வற்ற சமதர்ம விடுதலையையும், ஒற்றுமையையும் வலியுறுத்தி நின்றார். இவ்வாறாக, மக்களிடையே நாம் அனைவரும் ஜாதி, மதம், இனம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டு 'இந்திய நாட்டவர்' என்ற ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார்.

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, துச்சமாக வெண்ணிறம்மைத் தூறு செய்த போதிலும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.' என்ற வீரமுளக்கமிட்டு மக்களை வீறுகொண்டெழச்செய்தார்.

'சொந்த நாட்டிற் பார்க்கடிமை செய்தே துஞ்சிட்டோம்.இனி -அஞ்சிட்டோம். எந்த நாட்டினும் இந்த அநீதிகள் ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?' என்று அடிமைத் தனத்தின் கொடுமையை கூறி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இவ்வாறாக தனது கவிதைகள் வாயிலாக மாத்திரமன்றி இதழியல் பணியை மேற்கொண்டு வந்த நிலையில், அதனூடாகவும் விடுதலைப் போராட்ட உணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். அதாவது ஆங்கிலேயர்களின் கெடுபிடியால் விடுதலை வேட்கை ஊட்டும் கருத்துக்கள் மக்களைச்சென்றடைந்தால் போதும் என எண்ணியவர் பல புனைப்பெயர்களிலும் கட்டுரைகள் எழுதினர். புரட்சிகரமான கருத்துக்கள் மட்டுமன்றி,காட்சிகளும் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த இவர்.இந்தியா ,விஜயா ஆகிய இதழ்களில் கருத்துப்படங்களையும் வெளியிட்டு மக்கள் மனங்களில் உத்வேகத்தை உண்டுபண்ணினார்.அது மத்திரமன்றி இதழியல் பணியில் புரட்சியையும்,விடுதலையையும் வெளிப்படுத்தும் விதமாக அவர் நடத்திய 'இந்தியா' இதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டிருந்தார்.

சுதந்திர போராட்டத்தீ அவருக்கு காட்டுத்தீயாய், சுதந்திரக் கனலாய் பற்றி எரிந்தது. அவர் தனது பத்திரிகை, இலக்கியம், பாட்டு, கவிதை வடிவில் விடுதலை உணர்வை மக்களிடையே ஏற்படுத்தினர். அவரின் எழுச்சி வரிகளுக்கு தமிழகத்தில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட ஆங்கிலேய ஆட்சியினர், இந்திய பத்திரிக்கைக்கு தடை விதித்ததுடன்,அவரை கைது செய்து சிறையிலும் அடைத்தனர். ஆனாலும் அவர் எதற்கும் அஞ்சாது சுதந்திர உணர்வுகளை மக்களிடையே பரப்பிய வண்ணமே இருந்தார்.

மண்ணிற்குள் புதைந்து கொண்டிருந்த பாரத தேசத்தை கைகொடுத்து மீட்க வந்த பாரதியார் 1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலில் உள்ள யானையால் தூக்கி எறியப்பட்டு நோய்வாய்ப்பட்ட அவர் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி தனது 39-வது வயதிலேயே மரணமடைந்தார். 'கவிஞன் அழிந்தாலும்,கவிதை அழிவதில்லை' என்பது நிதர்சனமே. அவர் மறைந்தாலும் கூட அவர் மக்கள் மத்தியில் விதைத்த சுதந்திர வேட்கை என்ற விதை பெரு விருட்சமாய் மாறிவிட்டது. ஆனாலும் தான் விதைத்த மரத்தின் நிழலில் அமர அவரால்தான் இயலவில்லை. பாரதி இன்னும் சில காலம் இருந்திருந்தால் இந்திய தேசத்தை எப்படியெல்லாம் வடிவமைத்து இருப்பார் என்பதைக் கற்பனைக்குள் கூட கொண்டுவந்து விட முடியாது. எது எவ்வாறாயினும் இவர் இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாக காணப்பட்டது என்பது மறுக்கவும்,மறக்கவும் முடியாததொரு விடயமாகும்.



# அரசியலமைப்பின் அழுநாதம்
# அண்ணல் அம்பேத்கர்!




**சமூக** விடுதலையின்றி அரசியல் விடுதலை சாத்தியமில்லை என்கின்ற எண்ணப்பாங்குடன் இந்திய தேசத்தின் விடுதலைக்காக போராடிய ஒருவரே பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்கள். இந்திய அரசியலமைப்பை அவர் வரைந்ததே இந்தியா பிரித்தானியரிடமிருந்து முழுமையாக சுதந்திரமடையக் காரணம் எனலாம். ''கற்பி, புரட்சி, செயல் ஒன்றுசேர்' என்னும் மந்திரத்தை வெறும் வார்த்தையாக அன்றி தனது வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டியவரே அண்ணல் அம்பேத்கர். மக்களின் அறியாமையும் மூட நம்பிக்கையும் அவர்கள் மனதில் இருந்து வேரறுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட இவரது போராட்டம் நூற்றி ஐம்பது ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிரானது மட்டுமன்றி மூவாயிரம் ஆண்டுகள் வரை இந்தியாவை ஆண்ட சாதிவெறிக்கும் எதிரானது ஆகும்.

மத்திய பிரதேசத்தில் மாவ் எனும் இடத்தில் ஏப்ரல் 14-ம் திகதி 1891-ம் ஆண்டு பிறந்தார் அம்பேத்கர். இவரின் தந்தையின் பெயர் ராம்ஜி மாலோஜி சக்பால், தாயார் பெயர் பீமாபாய். அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி என்பதாகும். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். அம்பேத்கர் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதால் அவர் தனது பள்ளிக் காலங்களில் சந்தித்த இன்னல்களோ ஏராளம். தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளியில் நீர் அருந்தக்கூடாது என்றும், ஏனைய மாணவர்களுடன் சரிசமமாக ஒரே இருக்கையில் அமரக்கூடாது என்றும் பல விதமான மூட நம்பிக்கைகள் இருந்தது.

இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று அம்பேத்கர் எடுத்த ஆயுதம் தான் கல்வி. கிடைத்த வாய்ப்புக்கள் அனைத்தையும் முறையாகப் பயன்படுத்திக் கொண்டு தனது உயர்கல்வியை வெளிநாட்டில் சென்று படித்தார். அன்று தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்கக் கூடாது என்று கூறியவர்களுக்கு ஒரு நல்ல பாடம் புகட்டுமாறு தனது கல்வியால் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைத்தார். பொருளியல், அரசியல், சட்டம், மெய்யியல், தத்துவம் போன்ற அனைத்துத் துறைகளிலும் வெற்றி வாகை சூடினார்.

வாள், கத்தி போன்றவற்றால் செய்யும் போராட்டத்தை விட கல்வி மூலம் செய்யும் போராட்டம் மிகவும் சிறந்தது என உணர்த்தி காட்டியவர். இங்கிலாந்தில் இவருக்கு பாரிஸ்டர் பட்டம் வழங்கப்பட்டது. அமெரிக்கா சென்று கல்வி கற்ற முதல் இந்தியர் என்ற பெருமைக்கும் உரியவர் அம்பேத்கர் அவர்கள்.



சந்திரசேகரம்
சாரிஷா

அவர் உண்மையான ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். சுதந்திரத்தின் அர்த்தத்தை புரிந்து கொண்ட சில தலைவர்களில் இவரும் ஒருவராவார். பலருக்கு சுதந்திரம் என்பது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை எனத் தோன்றலாம். ஆனால் உண்மையான அர்த்தத்தில் அரசு யாருடைய கையில் இருந்தாலும் அனைவரும் சமுதாயத்தில் மரியாதைக்குரிய இடத்தைப் பெறுவதும் சமமான உரிமைகள் பொருளாதார சமத்துவத்தைக் கொண்டிருத்தல் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுதலே சுதந்திரமாகும். வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை சமூக இயலாமை, தீண்டாமை போன்றவற்றிலிருந்து விலகி ஒரு கண்ணியமான அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழும் போது உண்மையான சுதந்திரம் வெளிப்படுகின்றது.

இந்தியாவின் பல தலைவர்கள் சுதந்திரத்துக்காக போராடினார்கள் ஆனால் நாட்டில் பலர் அடிமைகளாகவும், விலங்குகளாகவும் வாழ சிலர் சலுகைகள் பெற்ற மேல்தட்டு வர்க்கத்தினராகவும் காணப்பட்டனர். இந்த வேறுபாட்டை முதலில் களைய வேண்டும் என உண்மையான சுதந்திரத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அதற்காகப் போராடிய உண்மையான தலைவராக அம்பேத்கர் விளங்குகின்றார். பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அதே நேரத்தில் சமுதாய அமைப்பிலும் பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்டவர்களின் கையில் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்று போராடினார்.



1930-ல் முதலாம் வட்ட மேசை மாநாடு முடிவுக்கு வந்தபோது இந்தியாவின் தேசியத் தலைவர்களுள் ஒருவராக உயர்ந்திருந்தார் அம்பேத்கர்

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மண்ணிலேயே அவர்களது ஆட்சிமுறையின் கோளாறுகளைக் கடுமையாகச் சாடினார். ''இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியாகவும் கிட்டத்தட்ட பிரான்ஸ் நாட்டு மக்கள் தொகைக்கு ஈடாகவும் இருக்கக்கூடிய பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக இங்கு பேசுகிறேன். உங்களது ஆட்சி எம் மக்களுக்கு அளித்துவந்த வேதனைகள் போதும். காலங்காலமாக எம்மக்கள் மதத்தின் பேரால் அனுபவித்துவரும் துயரங்களிலிருந்து மீட்காமல் உங்கள் அரசு மேலும் அவர்களை இழிவுபடுத்தி வருவதை இனியும் எங்களால் சகித்துக்கொள்ள முடியாது.

ஒரு தாழ்த்தப்பட்டவனுக்கு அந்த நாட்டின் ராணுவப் படையில் சேர உரிமை மறுக்கப்படுமானால் அப்படிப்பட்ட ஆட்சியே

> **முதலாம் வட்ட மேசை மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த வருடமே ஆங்கில அரசு இரண்டாவது வட்ட மேசை மாநாட்டுக்கான அழைப்பை வெளியிட்டது. சென்ற மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் சார்பாக மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்த காங்கிரஸ் கட்சி இந்த முறை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றது. காரணம் இடையில் ஏற்பட்டு இருந்த காந்தி – இர்வின் ஒப்பந்தம் என்றாலும் மூல காரணம்வேறொன்றாக இருந்தது. இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பைத் தீர்மானிக்கும் வட்ட மேசை மாநாட்டில் எங்கே தங்களது பங்களிப்பு இல்லாது போய்விடுமோ எனும் காங்கிரஸ் கட்சியின் அச்சமும் முதல் மாநாட்டுக்குப் பிறகு ஏற்பட்ட அம்பேத்கரின் பிரமாண்டமான அரசியல் வளர்ச்சியும்தான்.**

மிகுதி 12 ஆம் பக்கத்தில்...

# அரசியலமைப்பின் அழுநாதம் அண்ணல் அம்பேத்கர்!

எங்களுக்குத் தேவை இல்லை. இனி இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காக மக்களே ஆள்கிற புதிய ஆட்சிமுறை வேண்டும். அந்த ஜனநாயக ஆட்சியில் எம் தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது வாழ்கிற அடிமை நிலையிலிருந்து விடுபட்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் ஏனைய உயர் சாதியினரைப் போல பூரண விடுதலை பெற்றவர்களாக வாழ வேண்டும்!'' என உரத்துக் கூறினார்.

அன்று முதல் இந்தியாவிலிருந்து வந்த அனைத்துப் பிரதிநிதிகளும் அம்பேத்கரை சற்று மரியாதையுடன் பார்க்கத் துவங்கினர். வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய உரை குறித்து லண்டனிலிருந்து வெளியான ஆங்கில நாளேடுகள் புகழ்ந்தன. 'வயது வந்தோருக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும்' என்பன போன்ற அம்பேத்கரின் அதி முக்கியமான கோரிக்கைகள் குறித்து வியந்து எழுதின. 'அம்பேத்கரின் உரையே மாநாட்டின் சிறப்பு!' என இண்டியன் மெயில் நாளேடு எழுத ஸ்பெக்டேட்டர் நாளேடு அதற்கும் ஒரு படி மேலாக 'அம்பேத்கர் இந்திய தேசியத் தலைவர்களில் தவிர்க்க முடியாத நபர்!' எனப் புகழ் மாலை சூட்டியது.

முதலாம் வட்ட மேசை மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த வருடமே ஆங்கில அரசு இரண்டாவது வட்ட மேசை மாநாட்டுக்கான அழைப்பை வெளியிட்டது. சென்ற மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் சார்பாக மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்த காங்கிரஸ் கட்சி இந்த முறை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றது. காரணம் இடையில் ஏற்பட்டு இருந்த காந்தி - இர்வின் ஒப்பந்தம் என்றாலும் மூல காரணம் வேறொன்றாக இருந்தது. இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பைத் தீர்மானிக்கும் வட்ட மேசை மாநாட்டில் எங்கே தங்களது பங்களிப்பு இல்லாது போய்விடுமோ எனும் காங்கிரஸ் கட்சியின் அச்சமும் முதல் மாநாட்டுக்குப் பிறகு ஏற்பட்ட அம்பேத்கரின் பிரமாண்டமான அரசியல் வளர்ச்சியும்தான்.

காங்கிரஸ் கட்சி ஏன் அம்பேத்கரின் வளர்ச்சியைக் கண்டு பயப்பட்டன. அதற்கு சில காரணங்கள் இருந்தன. காங்கிரஸின் நோக்கம் தேச விடுதலை மட்டும்தான். ஆனால் அம்பேத்கருக்கோ தேச விடுதலையோடு சேர்த்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சட்டபூர்வமான அரசியல் விடுதலையும் முக்கியக் கடமையாக இருந்தது.

அதுவும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருக்கும்போதே அரசியல்ரீதியாக இதற்கு முடிவெடுக்க வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். இதனால் காங்கிரஸோடு கூட்டு சேராமல் தன்னிச்சையாகவே செயல்பட்டார். இவரது இந்தச் செயல்பாடு தங்களது போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வலு சேர்ப்பதாகவும் காங்கிரஸ் கட்சி கருதியது. தவிர்க்க முடியாத ஒரு புகை இருதரப்புக்கும் இடையே எழுந்து பின் அது அம்பேத்கரின் மீதான வன்மமாக உருவெடுக்கத்துவங்கியது. அம்பேத்கர் செல்லும் இடங்களுக்கெல்லாம் காங்கிரஸார் கறுப்புக் கொடிகளைக் காண்பித்து கோஷம் எழுப்பினர். ஆனால் அது எதையும் கண்டு கலங்காதவராக இன்னும் உறுதியுடன் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டுக்குத் தயாரானார் அம்பேத்கர்.

இந்தியா விடுதலை பெற்றவுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட அம்பேத்கரை, காங்கிரசு அரசு சட்ட அமைச்சராக பதவியேற்றுக் கொள்ளும்படி அழைத்தது. அம்பேத்கர் அதை ஏற்று விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரானார். ஆகஸ்ட் 29ல் அம்பேத்கர் இந்திய அரசிலமைப்பை உருவாக்கும் ஆணையத்திற்கு தலைவரானார். அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு குடிமக்களின் உரிமைகளுக்கு பலவகைகளில் பாதுகாப்பை வழங்கியது. அரசியலமைப்பு 1949 நவம்பர் 26, அன்று மக்களவையில் ஏற்கப்பட்டது.

( இத்தேதி 26 ஜனவரி 1929 , முழு தன்னாட்சி சாற்றல்நினைவாகத் தேர்வு செய்யப்பட்டது ). இதன் மூலம் இந்தியா ஒரு ஒருங்கிணைந்த, தன்னாட்சி கொண்ட, குடியரசின் மக்களாட்சிக் கோட்பாட்டின்படி வழிநடத்துகின்ற நாடாக அறிவித்துக் கொண்டது. நடைமுறைக்கு வந்த பிறகு, அதுவரை நாட்டின் அடிப்படை நிருவாக ஆவணமாக இருந்த இந்திய அரசு சட்டம், 1935 திற்கு பதில் இந்திய அரசியலமைப்பு நாட்டின் அடிப்படை நிர்வாக ஆவணமாக மாற்றியது.

ஒரு முழு இறைமை பெற்ற மக்களாட்சிக் குடியரசாகவும் சமய சார்பற்ற சமதர்ம குடியரசாகவும் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் குடிமக்களுக்கு அளித்து அவர்களுக்கான கடமைகளையும் வரையறுத்து ஒரு கூட்டாட்சி அரசாங்கமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் பாராளுமன்ற ஆட்சி முறையும் சுதந்திரமான நீதித்துறையும் கொண்டு இந்திய அரசியலமைப்பு இயங்குகின்றது. வயது வந்தோர் அனைவருக்கும் முழு வாக்குரிமை அளித்து ஒரு முழுமையான ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகின்றது. இச் சிறப்புக்களுக்கெல்லாம் காரணம் இந்திய அரசியலமைப்புத்தான்.


சென்ற நூற்றாண்டில் சுதந்திர நாடுகளான பல நாடுகளிலும் அரசியலமைப்புக்கள் சீர்குலைந்தும் சர்வாதிகாரமும் குழப்பமும் ஆட்சி செய்துகொண்டிருக்கையில் இந்திய நாடு மட்டும் தனித்துவமான பாதையில் மேலும் மேலும் செழுமை பெற்ற ஒரு மக்களாட்சி நாடாக விளங்குவதுடன் உலகின் முன்னணி நாடுகளுக்கு சவால் விடும் அளவுக்கு வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த அமைதியுடன் கூடிய முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணம் அரசியலமைப்பே ஆகும். இத்தகைய அரசியலமைப்பினை வரைந்து இந்திய தேசத்திற்களித்த மாபெரும் சட்ட மேதையான அண்ணல் அம்பேத்கர் அவர்கள் என்றுமே நினைவுகூர்ந்து போற்றப்பட வேண்டியவர்.





> “ஒரு முழு இறைமை பெற்ற மக்களாட்சிக் குடியரசாகவும் சமய சார்பற்ற சமதர்ம குடியரசாகவும் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் குடிமக்களுக்கு அளித்து அவர்களுக்கான கடமைகளையும் வரையறுத்து ஒரு கூட்டாட்சி அரசாங்கமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் பாராளுமன்ற ஆட்சி முறையும் சுதந்திரமான நீதித்துறையும் கொண்டு இந்திய அரசியலமைப்பு இயங்குகின்றது. வயது வந்தோர் அனைவருக்கும் முழு வாக்குரிமை அளித்து ஒரு முழுமையான ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகின்றது. இச் சிறப்புக்களுக்கெல் லாம் காரணம் இந்திய அரசியலமைப்புத்தான்”



# கதர் ஆடையெனும் இந்தியர்களின் கர்வம்!





பிரியா
இராமநாதன்

**அணிகின்ற** ஆடையையே தங்கள் அடையாளமாக , தங்கள் அரசியலாக, தங்கள் போராட்டமாக மாற்றியவர்கள் நம் வரலாறு நெடுகிலும் ஏராளமாக இருக்கின்றார்கள் . அந்தவகையில் இந்திய சுதந்திர போராட்டத்தின் மிகப்பெரிய திருப்புமுனையாக , இந்திய பொருளாதாரத்தின் எழுச்சிகளுள் ஒன்றாக இருந்த 'கதர் ஆடை இயக்கப் போராட்டம் ' பற்றி சற்று பார்ப்போம். சுதந்திரப் போராட்டத்தின் மிக முக்கிய அடையாளமாக இருந்த , அன்னிய நாட்டின் உற்பத்தியில் வராத, கையால் நெய்து உடுத்திக் கொள்ளும் ஆடை தான் இந்தக் கதர். கதர் உடுத்தியவர் எல்லாம் காங்கிரஸ் காரர் என்ற பெயர் வருமளவுக்கு கதர் பிரமலமானது என்றால் மிகையில்லை . கதரை பிரபலப்படுத்தியது மட்டுமல்ல அதை நாட்டுக்கும்அறிமுகப்படுத்தியவரும் காந்தியடிகள்தான் . ஆனால், நாட்டிற்க்கே கதரை அறிமுகப்படுத்திய காந்திக்கு, கதர் என்கிற ஆடையை முதலில் அறிமுகம் செய்தவர் ,இந்தியாவில் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கிய மௌலானா முகமது அலி மற்றும் சௌகத் அலி ஆகிய அலி சகோதரர்களின் தாய்தான்.சுதந்திர போராட்ட வராலாற்றில் காந்திக்கு உறுதுணையாக இருந்த அலி சகோதரர்களின் வீட்டுக்கு ஒருமுறை காந்தி சென்றபோது , அலி சகோதர்களின் தாயார் ஆலாஜிபானு என்கிற பலீமா, தனது கை ராட்டையில் நெய்த ஒரு ஆடையை காந்திக்கு பரிசாக வழங்கினார். அந்த ஆடையைப்பற்றி விரிவாக அந்த அம்மையாரிடம் காந்தியடிகள் வினவியபோது , பருத்தி நூலில் இருந்து கையால் நூற்று எடுத்த இவ்வாடையானது உருது மொழியில் ஃகதர் எனப்படும் என்றும் ஃகதர் என்றால் கவுரவம் என்று பொருள்படும் என்றும் அதனால் காந்தியடிகளை கௌரவப்படுத்தும்பொருட்டு இந்த ஆடையை வழங்குவதாகவும் தெரிவித்தார் பலீமா.


இந்தச் சம்பவத்தின் பின்னணியிலேயே , ஃகதர் என்றால் தனது கரங்களால் தானே நெய்து உடுத்தும் ஆடை என்றும் அன்னிய கலப்பில்லாத ஆடை என்றும் நாட்டின் மக்களுக்கு கௌரவத்தையும் சுய மரியாதையையும் வழங்கும் தன்மை உடையது என்ற கோட்பாடு காந்தியால் அறிமுகமானது. பின்னாளில் ஃகதருக்கு முன்னால் இருந்த 'ஃ' என்ற எழுத்தின் ஓசை மறைந்து 'கதர்' என்ற புதிய ஓசை உடைய சொல் உருவாகி, கதர் என்ற பெயரில் வழங்கி வருகிறது. சுதந்திர இயக்கத்தின் அடையாளமாக இந்தக் கதர் பின்னாளில் மாறியதற்கும் , கதர் அணிவது கவுரவம் மட்டுமல்ல உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் முயற்சி என்பதை இடித்துரைப்பதற்கும் களமாக அமைந்ததென்னவோ தமிழகத்தின் மதுரை மாநகரம்தான் என்றால் மிகையில்லை !

செப்டம்பர் 22,1921 காந்தியடிகள் தமிழகத்தின் மதுரை மாநகரம் வந்திருந்த போது உடம்பில் அரையாடை மட்டுமே அணிந்திருந்த ஏழை எளியோரைக் கண்டு மனம் வருந்தி தானும் அரையாடைக்கு மாறியநாள் ! இந்திய சுயசார்பான நெசவுத் தொழிலை அழித்துவிட்டு ஆங்கிலேய அரசாங்கம் தன்னுடைய துணிகளை இறக்குமதி செய்து அதன் மூலம் கொள்ளை லாபத்தை சம்பாதித்துக்கொண்டிருந்தது.இந்திய ஏழைகள் வாழ்வாதாரமின்றித் தவித்துக்கொண்டிருந்தார்கள். இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தது காந்தியின் முடிவென்றால் மிகையில்லை .காந்தியடிகளின் முடிவு திடீரென்று ஒரு நாளில் எடுத்ததல்ல. இந்தியாவின் பல பாகங்களுக்கும் போகும்போதெல்லாம் அங்கு இருக்கும் ஏழை மக்களை சந்திக்கும் போது ஏற்பட்ட தாக்கத்தின் விளைவுதான் இது.

> "காந்தியின் வேண்டு கோளுக்கு இணங்க, கங்காபென்ம ஜூம்தார் என்ற பெண்மணி, விஜய்பூர் சமஸ்தானத்தில், நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் பரண்மேல்கிடந்த கைராட்டையைக் கண்டுபிடித்து காந்தியிடம் கொடுக்க, சபர்மதி ஆசிரமத்தில் காந்தியினால் கதர் உற்பத்திக்கு புத்துயிர் கிட்டியது."

காந்தியின் வேண்டுகோளுக்கு இணங்க, (கங்காபென்) மஜூம்தார் என்ற பெண்மணி, விஜய்பூர் சமஸ்தானத்தில், நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் பரண் மேல் கிடந்த கைராட்டையைக் கண்டுபிடித்து காந்தியிடம் கொடுக்க , சபர்மதி ஆசிரமத்தில் காந்தியினால் கதர் உற்பத்திக்கு புத்துயிர் கிட்டியது . துணிகளை உற்பத்தி செய்யும் ஆலைத் தொழில்நுட்பத்துக்கு மாற்றாக எளிமையான தொழில்நுட்பத்தைக் கொண்ட கைராட்டை, கைநெசவு என்ற கதர் உற்பத்தியை ஏழை மக்களிடமே கொடுத்துக் கதரை உற்பத்தி செய்யக் கேட்டுக் கொண்டார் காந்தி. அப்படி உற்பத்தி செய்யக்கூடிய கதர், தேவைக்குப் போதுமானதாக இருக்கவில்லை . ஏனெனில் , ஒத்துழையாமை இயக்கம் வேகமாகப் பரவப் பரவ, மக்கள் ஆர்வத்தோடும் தேசபக்தியோடும் கதர் உடுத்த ஆரம்பித்தார்கள். கதர், சுதந்திரப் போராட்டத்தின் சின்னமாக மாற ஆரம்பித்தது. மக்களின் கதர்த் தேவை பலமடங்கு அதிகரித்துத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், தனக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவுக்கு மட்டும் கதரை உடுத்துவது என்று காந்தி முடிவெடுத்தார். அவரது அந்த முடிவே மேலாடையின்றி இறுதிவரை அவரை இருக்கச் செய்ததெனலாம் .





உடுத்த உடையின்றி இருக்கும் மக்களிடம் சென்று, இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிக் கூறும்போது, தான் மட்டும் தேவைக்கு அதிகமாக உடையை உடுத்திக் கொண்டு இருப்பது அவர்களை நம்மிடமிருந்து அந்நியப்படுத்தும் என எண்ணிய காந்தியடிகள் , ஏழைகளோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்காக அவர்களைப் போலவே நாமும் ஏன் உடை உடுத்திக் கொண்டு எளிமையாக வாழக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.ஆக, உடையைக் கூட ஆயுதமாக்கி அரசியல் களத்தில் போராட முடியும் என்று உலகுக்குக் காட்டிய முதல் மனிதர் காந்தியாகத்தான் இருக்கும்.


கதர் நெய்வதும், விற்பதும், வாங்குவதும் தண்டனைக்குரிய செயல்களாக பிரிட்டிஷாரால் சட்டம் கொண்டுவரப்பட்டாலும் , அந்நிய பொருட்களை புறக்கணிப்போம் என்கிற அடிப்படையில் சுதேசிகளால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தனை துணிகளும் தீக்கிரையாக்கப்பட்டது . இந்த கதர் இயக்கப் போராட்டமானது இந்திய சுதந்திர போராட்டத்தில் மிகப்பெரிய மைல்கல் என்றாலும் தகும் .





# அகிம்சையின் அறுவடையில் விளைந்த சுதந்திரம்!



பி.மாணிக்கவாசகம்

**இந்தியப்** பெரும் தேசம் பல விடயங்களில் சிறப்புடையது. பாரம்பரியம், கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு, ஆன்மீகம் என அதன் பட்டியல் மிக நீளமானது. தனித்துவமானது. அந்த வகையில் அதன் சுதந்திரமும் தனிப்பட்டச் சிறப்பைக் கொண்டிருக்கின்றது.



ஆங்கிலேய ஆதிக்கத்தில் இருந்து இந்தியா அடைந்த விடுதலை சிறப்பானதொரு தனிப்பெருங் கதையாகும். விடுதலைக்கான இந்தியாவின் போராட்டம் உலக நாடுகளுக்கே முதன்மையானது. முற்றிலும் வித்தியாசமானது. அஹிம்சை வழியில் போராட்டம் நடத்தி வெற்றி காண முடியும் என்ற புதிய பாடத்தை இந்தியா உலகத்திற்குத் தனது சுதந்திரப் போராட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியது. இந்திய தேச பிதா என்று போற்றப்படுகின்ற காந்தியடிகளே இதன் மூலகர்த்தா.

## அடக்குமுறைக்கு மருந்தாய் அகிம்சை

ஆயுதங்கள் பல ஏந்தி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்ட ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராட காந்தி இந்திய மக்களுக்குக் காட்டிய வழி அஹிம்சை வழி. வன்முறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக அகிம்சை எனும் ஆயுதத்தையே அவர்கையில் ஏந்தினார். அஹிம்சைவழியே சிறந்தது. வலிமையானது என்பதை அவர் நடைமுறையில் சாதித்துக் காட்டினார்.

வாய்மையே வெல்லும் என்பது அவருடைய தாரக மந்திரம். உண்மையாக இரு. நேர்மையாகச் செயற்படு - இது அவரது வேதவாக்கு. கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்து அறிந்த பின்பு முடிவெடு என்பதே அவரது தீர்க்கமான முடிவு.

வன்முறையும் ஆயுத மோதலும் பிரச்சினைகளைத் தீர்க்க மாட்டா. சாத்வீக வழியில் அஹிம்சை ரீதியிலான செயற்பாடுகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையை காந்தியடிகளின் தலைமையில் இந்தியா

> இந்தியா தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற வேளையில் அதன் அஹிம்சை வழிமுறையை நினைவு கூர்வது மிகப் பொருத்தமானது. அறிவியலும் தொழில் நுட்பமும் விரிவடைந்து புதிய யுகத்தில் உலகம் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. எண்ணிப் பார்க்கவே முடியாத வழிகளில் தொழில்நுட்ப முறைகள் உலக மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றன.



தனது சுதந்திரப் போராட்டத்தின் ஊடாக நிலைநாட்டியிருக்கின்றது. இது உலக நாடுகளுக்கும் உலக மக்களுக்கும் பயன்மிக்கது. இது ஓர் அரசியல் பண்பாடு. நல்லதொரு வழிமுறை.

உலகெங்கும் அகிம்சையின் அடிச்சுவடு

அக்டோபர் இரண்டாம் திகதியை சர்வதேச அஹிம்சை தினமாக உலக நாடுகள் கொண்டாடுகின்றன. அஹிம்சை என்பதன் அடையாளமே காந்தியடிகள்தான். இந்தியாவின் தந்தை என போற்றப்படுகின்ற காந்தியடிகளின் பிறந்த தினத்தையே ஐ.நா. மன்றம் 2007 ஆம் ஆண்டு ஜுன் 15 ஆம் திகதி சர்வதேச அஹிம்சை தினமாகப் பிரகடனம் செய்தது.

அஹிம்சை என்பது வலிமையானவர்களின் ஆயுதம். மனிதன் தனது கூர்மதியைக் கொண்டு அழிவுகளுக்காக உருவாக்கியுள்ள வலிமையுள்ள ஆயுதங்களை விட மிகவும் வலிமையானது என்பதே காந்தியடிகளின் அஹிம்சை பற்றிய வரைவிலக்கணம்.

இந்தியா தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற வேளையில் அதன் அஹிம்சை வழிமுறையை நினைவு கூர்வது மிகப் பொருத்தமானது. அறிவியலும் தொழில்நுட்பமும் விரிவடைந்து புதிய யுகத்தில் உலகம் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. எண்ணிப் பார்க்கவே முடியாத வழிகளில் தொழில்நுட்ப முறைகள் உலக மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றன.

அதேபோன்று நாடுகளுக்கிடையிலான வர்த்தக, இராணுவ, பாதுகாப்புக்கான பிராந்தியப் போட்டிகளிலும் அறிவியலும் தொழில்நுட்பமும் பல்வேறு நவீன வழிமுறைகளைப் புகுத்தி இருக்கின்றன. இந்த வழிமுறைகள் ஆக்க முயற்சிகளைவிட அழிவுகளுக்கான பாதைகளை விரிவடையச் செய்திருக்கின்றன.

இந்த நிலையில் அஹிம்சை வழியென்பது ஆயுத வழியிலான வன்முறைகளிலும் பார்க்க வலிமை கூடியது. என்பதற்கமைய அஹிம்சை வழியின் வலிமையை அரசுக்கு



எதிரான அண்மைய போராட்டத்தின் மூலம் இலங்கை மக்கள் உலகுக்கு வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆயினும் அஹிம்சை வழியின் தாற்பரியம் அதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு அவசியமான மட்டங்களில் இன்னும் ,ஏற்படவில்லை என்பது கவலைக்குரியது.

தனிமனித கோபதாபங்களுக்கும், வல்லரசுப் போட்டி நிலையிலான கூட்டு நிலையிலான கோபதாபங்களுக்கும் அறிவியலும் தொழில்நுட்பங்களும் வகுத்துள்ள வழிமுறைகள் மேலும் உரமூட்டி இருக்கின்றன. இவைகள் பேரழிவுகளுக்கே வழிசமைத்திருக்கின்றன. நாடுகளுக்கிடையிலான ஆதிக்கப் போட்டிகளில் அஹிம்சா மூர்த்தி காந்தியடிகளின் அஹிம்சை வழிமுறைகள் பின்பற்றப்படுமேயானால் உலகில் அழிவுகள் குறைவடையும். நாடுகளுக்கிடையிலான இணக்கப்பாடும், இணைந்த செயற்பாடுகளும் விரிவடையும் மனித நேயம் செழிக்கும் சமாதானமும் ஐக்கியமும் நிலைக்கும்.

இந்திய சுதந்திரம் என்றதும் , இந்திய சினிமாவின் ஞாபகம் எனக்கு ஏன் வருகின்றது? முழந்தாளுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போட முனைகிறேனா? .இல்லவே இல்லை. ஒரு நாடு சுதந்திரம் பெற்றது உண்மைதான் என்றால், அதன் ஊடகங்கள் இயங்குகின்றன என்பதை வைத்து, அந்தச் சுதந்திரம் எந்த அளவுக்கு விரிந்திருக்கின்றது என்று சொல்லி விடலாம். இந்தி , தமிழ், மலையாளம் தெலுங்கு, கன்னடம் என்று பன்மொழிகளில் திரைப்படங்களைத் தயாரித்து, பிராந்திய ரீதியாக பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளித்து, இந்திய பொருளாதாரத்தை உயர்த்த கைகொடுக்கும் ஒரு குட்டி ஜாம்பவானாக இந்திய சினிமா உருவெடுத்துள்ளதை உங்களால் உணர முடிகிறதா? திரைப்படங்களை எடுக்க அரசு தாராளமாகச் சுதந்திரத்தை தந்து, நாடாளாவிய கௌரவங்களையும் அவ்வப்போது வழங்கி, சினிமாத்துறையை ஊக்கிவித்து வளர்ப்பதை கவனித்திருக்கிறீர்களா? பல திரைப்படங்கள் மூலம் பல நல்ல சேதிகளை சமூகத்திற்கு கொடுத்திருப்பதை நிச்சயம் அவதானித்திருப்பீர்கள். நாடு உண்மையிலேயே சுதந்திரமடைந்து விட்டதா என்பதற்கான அளவுகோல்களை நீங்கள் தேடினால், அதில் இந்திய சினிமாவையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# அள்ளித் தரும் வெள்ளித்திரை




ஓர் உபகண்டமாகத் திழ்கின்ற இந்தியாவின் திரைப்படத்துறை பக்கம் செல்வோம். பல்வேறு துறைகளில் வியக்ககத்தகு வளர்ச்சியைக் கண்டு விட்ட இந்தியா சினிமாத்துறையையும் விட்டு வைக்கவில்லை. சுதந்திரமாக தமது கருத்துக்களை சமுதாயத்திற்குச் சொல்லும் ஓர் அருமையான ஊடகமாக இது இருந்து வருகின்றது. சமுதாயத்தில் சினிமா எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை எவருமே சொல்லித் தெரிய வேண்டியதில்லை . அந்தச் சினிமாவை பல்வேறு மொழிகளில் வளர்த்தெடுத்ததால் , இன்று இந்திய மண்ணில் அது அனுகூலங்களைச் சந்தித்துள்ளதை காண முடிகின்றது.








ஏ.ஜே.ஞானேந்திரன்

## வந்தார் காளிதாஸ்

இந்தியாவின் ஒரு மாவட்டமான தமிழகம் என்னும் தமிழ் நாடு, தமிழைப் பேசும் மக்களைக் கொண்ட ஓர் பிரதேசம். 1931இல் ஒரு பேசும் படமாக காளிதாஸ் என்ற திரைப்படத்தை, எச்.எம். ரெட்டி என்பவர் அறிமுகம் செய்த பின்னர் தமிழ் சினிமா உலகம் மெல்ல மெல்ல ஏறுமுகத்தில் செல்ல ஆரம்பித்து விட்டது. ஒரு தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும் பொறுப்பெடுத்து, , 1936இல் மிஸ் கமலா என்ற திரைப்படத்தை ரசிகர்களுக்கு வழங்கிய ரி.பீ. ராஜலக்ஸ்மி தமிழ் சினிமா உலகின் முதல் தயாரிப்பாளராகினார். தமிழ் நாட்டின் மிகப் பிரபல்யமான ஸ்டூடியோவான(1907-1979) ஏவிஎம் (ஏ.வி.மெய்யப்பன்) தமிழ் சினிமாவில் தனி முத்திரை பதித்தது. 40களில் முளைத்த ஜெமினி ஸ்டூடியோ அதன் தயாரிப்புகளான மதனகாமராஜன், சந்திரலேகா போன்ற திரைப்படங்களால் தனக்கு அழியாப் புகழ் சேர்த்துக் கொண்டது.




## தமிழ் சினிமா ஒரு கிங்மேக்கர்

முதல் வண்ணப்படமான அலிபாபாவும் 40 திருடர்களும் தயாரிக்கப்பட்ட இடமாக மொடேர்ன் ஸ்டூடியோவுக்கு தமிழ் சினிமாவில் தனி இடம் கிடைத்தது. ஒரு நடிகரே நாடாள-அதுதான் எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சராக, சினிமா உலகம் அதி சக்தி வாய்ந்தது என்ற உண்மை மக்களுக்கு புலப்பட்டது. இவர் வழியில் சினிமாவுக்கு பொறி பறக்கும் திரைக்கதை வசனங்கள் எழுதிய கருணாநிதியும், எம்.ஜி.ஆ.ரின் பிரியமானவராக வலம் வந்த நடிகை ஜெயலலிதாவும், தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியதும், தமிழ் சினிமா ஒரு கிங் மேக்கர் என்பதைப் பறைசாற்றியது. சில திரைப்படங்கள், சிலருக்கு, வாழ்வியல் முன்னேற்றம் காணும் உந்துசக்தியாகவும், அமைகின்றன. சிலருக்குத் தற்காலிகமான உளவியல் வேதனை வலி நிவாரணிகளாகவும், அமைகின்றன.

## உழைப்பாளிகளுக்கு சினிமா

சமூக அவல நிலைகளைப் பேச்சிலோ, எழுத்திலோ உணர்வதை விட, திரைப்படங்களின் காட்சிப்படுத்தலின் வழியாக உணரும்போது, அவற்றின் வலிகளைத் துல்லியமாக உணர ஏதுவாகிறது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் விதத்தில், சமூகத்தில் பெரிய பொருளாதாரம் சார்ந்த தொழிலாகவும் திரைப்படம் விளங்குகிறது.

இந்தச் சினிமாவை வளர்க்க, சினிமா வாலும் கொருளாதாரத்தை வளர்க்கலாம் என்று இந்தியா காண்பித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஒருவர் எப்படி எப்படியெல்லாம் உழைக்கிறார் என்பதற்கு, விகடன் இதழொன்றில் வந்த துணுக்குத் தகவைலைத் தருகிறேன்.

மிகுதி 16 ஆம் பக்கத்தில்...



# அள்ளித் தரும் வெள்ளித்திரை

சினிமா குறித்து பேசும்போது நினைவுகூர வேண்டியவர் ஏ.கருப்பன் செட்டியார் எனும் ஏ.கே செட்டியார். புகைப் படக்கலையை ஜப்பானிலும் திரைப்பட தொழில்நுட்பத்தை அமெரிக்காவில் பயின்றவர்.1937-ல் காந்தி குறித்து படம் இயக்க ஆரம்பித்து 1940-ல் முடித்துள்ளார். 50,000 அடி பிலிம் வாங்கி அதை 12,000 அடியில் சுருக்கி இரண்டரை மணி நேரப்படமாக கொண்டு வந்தார்.

முதல் ஆண்டு முழுவதும் தேடிச் சேகரித்ததில் திருப்தி இல்லாமல் ஐரோப்பாவுக்குப் பயணமானார். நான்கு கண்டங்களில் லட்சம் மைல் பிரயாணம் செய்துள்ளார். உலகம் முழுமையிலும் 30 வருடங்களாக ஏறக்குறைய 100 கேமராக்கள் எடுத்த சேகரிப்பாக காந்தி குறித்த ஆவணப்படத்தை இயக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது ஒருவர் உழைப்பின் கதை. இப்படி இந்தியா முழுவதும் இந்தத் துறையை வளர்க்க, அரும்பாடுபடுபவர்கள் ஏராளம்.





ஏ.ஜே.ஞானேந்திரன்

## பாலிவுட் உலகம்


அதென்ன பாலிவுட்? மேற்கத்தைய உலகில் ஆங்கில மொழியில் ஹாலிவுட் திரைப்படங்களை தயாரிக்க, அதன் வழியில், இந்தியாவின் மும்பாய் நகரை மையமாகக் கொண்டு, இந்தி மொழியில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் தான் பாலிவுட் படங்கள் என்றாயின. உலக அளவில் மிக அதிகமான திரைப் படங்களை தயாரிக்கும் மையங்களில் இதுவும் ஒன்று. 934 இல் ஓர் ஊமைப்படமான Bombay Talkies என்ற படம்தான் இந்திப் படங்களின் முதல் வரவு! அன்றிலிருந்து ஆரம்பித்த வளர்ச்சி, இன்று அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு , பெரிய உயரங்களைக் கண்டிருப்பது, இந்திய மண்ணிற்கு பெருமை சேர்ப்பது. அசோக்குமார்-தேவிகா ராணி ஜோடியிலிருந்து ஆரம்பித்து, ராஜ் கபூர், டிலீப் குமார், ஷாருக்கான், அமிதாப் பட்சன் என்று ஆண்கள் நட்சத்திரப் பட்டாளமும், மும்தாஜ், ஸீனத் அம்மன், ஹேமா மாலினி, மாதுரி டிக்ஸிட், கஜோல், என்று பெண்கள் பட்டாளமும் இந்த நட்சத்திர உலகில் மின்னியவர்கள்... இன்னமும் மின்னிக் கொண்டு இருப்பவர்கள்..இன்று 79வயதைத் தொடும் அமிதாப் பச்சன், மாம்பழ ஜூஸ் ரிவி விளம்பரமொன்றில் படு உற்சாகத்துடன் வந்து போவதைப் பார்க்கும்போது, இளமையை இன்னமும் தொலைக்காவஞீதவர்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இன்று வருடத்திற்கு 1000 இந்தி திரைப் படங்களை வெளியிட்டு, பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஒரு பெரிய தொழிலகமாக மாறிவிட்டது இந்த சினிமா உலகம்...

## விரியும் சினிமா உலகம்

இந்திய மண்ணில், தமிழ், இந்தித் திரைப்படத் தயாரிப்பை விட, மலையாளம், தெலுங்கு,கன்னட திரைப் படங்களும் தாராளமாகத் திரையிடப்படுகின்றன. 1928இல் மௌனத் திரைப்படமொன்றைத் தயாரித்து ' Vigathakumaran', முதல் பேசும்படத்தை (பாலன்) 1938இல் தயாரித்தது மலையாள சினிமா உலகம்.இன்று பெரு வளர்ச்சியைக் கண்டு, உலக தரத்தில் பல சிறந்த படங்களைத் தந்து கொண்டிருக்கின்றன. பிரபல இயக்குனர் அடூர் கோபாலகிருஷ்ணன், சிறந்த நடிகர்களான மம்முட்டி, மோகன்லால் போன்றவர்களை நமக்குத் தந்தது மலையாள(கேரள) சினிமாதான்..குறிப்பாக தெலுங்குத் திரைப்படங்களும் பெருமளவிலான ரசிகர் பட்டாளத்தைக் கொண்டுள்ளன..



## இந்திய பொருளாதாரமும் சினிமாவும்

உலகிலேயே மிக அதிகமான திரைப் படங்களைத் தயாரிக்கும் நாடாக இருப்பது இந்தியாதான்.2013இல் எடுத்த ஒரு புள்ளி விபரத்தின்படி  இந்தியா 1724 திரைப்படங்களை எடுத்துள்ளது. அமெரிக்காவோ 738 மாத்திரந்தான். சீனாவில் எடுத்ததோ 638திரைப்படங்கள்.இந்தியாவின் மீடியா, களியாட்டத் துறை நிறுவனங்கள் தரும் மொத்த வருமானத்தில் 20 வீதத்தை இந்திய சினிமா தருகின்றது. அது மாத்திரமல்ல, இந்தத் திரைப்படங்களை தயாரிக்கும் மும்பாய் அதன் சுற்று வட்டாரங்கள், சென்னை எனப்படும் தமிழ்நாடு, ஹைதர்பாத், கர்நாடகா, கொல்கத்தா,  கேரளா ஆகிய பிரதேசங்கள் பல்லாயிரக் கணக்கானவர்களுக்குசோறு போடுகின்றன. பல முன்னணி நட்சததிரங்களுக்கு கார், பங்களா என்று ஆடம்பர வாழ்வளித்து வருகின்றன.

சினிமா என்ற போதை வேண்டாம் என்கிறார்கள்.எதில்தான் போதை இல்லை. பேச்சில்கூட போதை இருப்பதைக் கவனித்துள்ளீர்களா? குடிப்பதில் போதை , உண்பதில் போதை என்று போதை மயமான உலகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சினிமா ஒரு சாராரின் பார்வையில் வேண்டப்படாத ஒன்றாக இருக்கலாம். மனிதன் யந்திரமல்ல. அவனுக்கும் மனம் விட்டு சுதந்திரமாகச் சிரித்து மகிழ சில மணி நேரம் தேவைப் படுகின்றது.  இதற்கு சினிமா பெரிய அளவில் கைகொடுத்து வருகின்றது என்பதை மறக்க வேண்டாம்.




தமிழருவி
ஞாயிற்றுக்கிழமை
14 ஆகஸ்ட் 2022


# சுதந்திரத்தின் தித்திப்பு ஜிலேபியாய் நாவில்









பிரமிளா
நாகேஸ்வரராஜா

இந்திய நாட்டை நீங்கள் சொந்த மாக்க உதிரம் கொடுத்த தியாகிகளுக்கு வீர வணக்கம்.

இந்திய மக்கள் அனைவருக்கும் இனிய சுதந்திர தின வாழ்த்துகள்.

1947 ஆகஸ்ட் 15 ஒவ்வொரு இந்தியர் வாழ்விலும் நினைவில் நிற்கும் ஒரு தினமாக கருதப்படுகிறது. இந்திய தேசத்தின் 'உதய நாள் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் இறையாண்மை கொண்ட

நாடாகத் திகழும் இந்தியாவின் சுதந்திரம் என்பது நூற்றுக் கணக்கான ஆன்மாக்கள் மற்றும் ஆயிரக் கணக்கான புரட்சியாளர்கள் மற்றும் தலைவர்களின் வெற்றி என்று தலை நிமிர்ந்து சொல்கிறார்கள்.

தண்ணீர் விட்டா வளர்த்தோம்?
கண்ணீரால் இப் பயிர் காத்தோம்,

என்ற வரிகள் இந்தச் சுதந்திரம் கிடைக்க அந்த தேசம் எவ்வளவு பாடு பட்டிருக்கிறது என்று புரிகிறது.

## இந்திய தேசத்தின் பெருமை

விடுதலை அடைந்த மிகக் குறுகிய காலத்திலேயே பெரு வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு இணையாக இந்தியா வளர்ந்து நிற்பது உலக அரசியலில் ஒரு ஆச்சர்யம்.

## வந்தே மாதரம்

தேசிய எழுச்சிக்கு தாரக மந்திரமாக விளங்கியது இந்த அற்புத பாடல்.இப் பாடல் என் உள்ளத்தையும் ஈர்த்தது. நான் முதன் முதலாக இந்தச் கீதத்தை கேட்ட போது அதன் வசீகரத்தில் சிலிர்த்தேன். இந்தச் கீதம் கோடானு கோடி மக்களின் இதயத்தில் என்றும் கீர்த்தியோடு இருக்கும்.

## அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்க் குரல்

கல்கதாவில் இருந்து தனது சொந்த ஊருக்கு ஒரு இளைஞன் இரயில் பயணம் மேற்கொண்டான். ஓடும் ரயிலில் இருந்த படி இரு மருங்கும் காண அங்கே பசுமையான வயல்கள்,

உயர்ந்த மலைகள், ஓங்கி வளர்ந்த மரங்களில் தொங்கும் காய்,கனிகள்,

ஓடும் ஆறுகள், பாயும் அருவிகள், வீசும் தென்றல் இவற்றின் அழகில் மயங்குகிப் பாடுகிறான்.

## வந்தே மாதரம்

தாய்த் திருநாடே உன்னை வணங்குகிறேன் உன் அழகை ஆராதிக்கிறேன், உனக்காக என் உயிரையும் தருவேன், உன் பாத கமலங்களை முத்தமிடுகிறேன் தாயே! என்று உணர்ச்சி பொங்க உள்ளம் உருகிப் பாடுகிறான். பாடிய கவிஞன் பங்கிம் சந்திர சட்டர்ஜி இது வெளியில் எவருக்கும் தெரியாது பிரசுரமாகவும் இல்லை. இது வந்தே மாதரம் என்ற பாடல் பிறந்த வரலாற்றின் முதல் கட்டம். ஆறு



ஆண்டுகள் கழித்து இதே கவிஞர் 'ஆனந்த மடம்' என்ற நாவலை எழுதிய போது அதில் வந்தே மாதரம் பாடலை சேர்த்து மேலும் நான்கு பந்திகளை எழுதி ஆறு பந்தி கொண்ட பாடலாக 'ஆனந்த மடம்' நாவலில் இடம் பெற்றுள்ளது. புதிதாக எழுதிய பந்திகளில் தன் தாய்த் திருநாட்டை துர்க்கையின் உருவமாக கண்டு

*அன்னையே துர்க்கை அம்மனே*
*அன்பும், அறிவும், ஆற்றலும், பலமும் அனைத்தும் அருள்பவள் நீயே*
*உன் ஆன்ம பலம் யார் அறிவார்?*
*உன்னை எதிர்த்தவர்கள்*
*அழிவார்கள் இது சத்தியம் !*
*அன்னையே உன்னை வணங்குகிறேன்.*

என்ற பொருள் பொதிந்த வரிகள் புதிய பகுதியாக இடம் பெற்றன.

'நவாப் மன்னரின் ஆட்சியால் எழுந்த பெரும் போராட்ட புரட்சியை மையமாக வைத்து கற்பனையாக எழுதப்பட்டது தான் 'ஆனந்த மடம்' நாவல். அந்நாவல் பிரபலமானபோது 'வந்தே மாதரம்' பாடலும் பிரபலமாயிற்று. பின்னாளில் வங்கப் பிரிவினைக்கு 'கஞ்சான் பிரபு வித்திட வங்கப் பெரு மக்கள் பொங்கி எழுந்தனர். வந்தே மாதரப் பாடலை 'அரவிந்த கோஷ்' ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க, 'ரவீந்திரநாத் தாகூர்' இசை அமைத்துப் பாட ஊர்வலமாக சென்ற மக்கள் அனைவரும் உணர்ச்சி பொங்க 'வந்தே மாதரம்' என்று முழங்கினர். இந்த வார்த்தையை உச்சரிக்கக் கூடாது என்று ஆங்கிலேய அரசு தடை விதித்தாலும் இந்தச் சொல்லே இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் 'மந்திரச் சொல்' என்றாகி விட இந்தியர் ஒவ்வொருவரும் 'வந்தே மாதரம்' என முழங்கத் தொடங்கினர்.

தமிழ் நாட்டு கவியான 'பாரதியும்' வந்தே மாதரம் என்போம். எங்கள் மாநிலத் தாயை வணங்குவதும் என்போம் என்று உணர்ச்சி ததும்பும் பாடலை எழுதி தெருவெல்லாம் முழங்கச் செய்தார். 'வந்தே மாதரம்' என்ற சொல்லை உச்சரித்ததற்காக தூக்குக் கயிறை முத்தமிட்டவர்கள் ஆயிரக்கணக்கில் என்றால், துப்பாக்கி குண்டுக்கு இரையானவர்கள் பல்லாயிரம் பேராம்.

## விடுதலை வேட்கையின் ஆரம்பம்

ஆயுத வழி போராட்டங்கள் மட்டும் போதாது என உணர்ந்த 'காந்தியடிகள்' அகிம்சை வழியில் 'உப்பு சத்தியாக்கிரகப் போராட்டம்' செய்தார். இது இந்திய சுதந்திர வரலாற்றில் மிகவும் முக்கியமானது.

'வெள்ளையனே வெளியேறு' என்ற கோசத்தோடு இந்தியா எங்கும் போராட்டம் வலுக்கத் தொடங்கியதும் இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியால் ஆங்கிலேயர்களுக்கு பெரும் சோர்வு ஏற்பட்டு இந்தியர்களின் தொடர் போராட்டங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் போக வேறு வழியின்றி இந்தியாவை இந்தியர்களிடமே ஒப்படைத்தனர். இத்தகைய சுதந்திர வாசத்தை இன்று நிம்மதியாக அனுபவிப்பதன் பின்னனியில் பலரின் அழுகுரலும்,வேதனைகளும், ஓலங்களும்,மரண சங்கடங்களும் கலந்து இருக்கத்தான் செய்கிறது. இந்நாளில் ஒவ்வொரு இந்தியனும் பெருமிதத்தாடே குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி, சுதந்திரத்தின் மகிமையை விளக்கி மகிழ்ச்சியாக ஜிலேபி உண்டு கொண்டாடுங்கள்.



## தேவையானவை

**1 கோதுமை மா - அரைக் கப்**
**2 கடலை மா - ஒரு தேக்கரண்டி**
**3 சீனி - 1/2 தே.க**
**4 சமையல் எண்ணெய் - 1/2 மே. க**
**5 ஈஸ்ட் - 1/2 தே .க**
**6 வெது வெதுப்பான தண்ணீர் -1/3 கப் + 2 மே.க**
**சீனிப்பாகு செய்ய**
**வெள்ளைச் சீனி - 1 கப்**
**ஏலக்காய் தூள் - ஒரு சிட்டிகை**
**எலுமிச்சைசாறு - 1 தே.க**
**மஞ்சள் நிறம் அல்லது ஆரஞ்சு நிறம் ஒன்றிரண்டு துளி மட்டுமே**





## செய்முறை

ஒரு வாயகன்ற சிறு கிண்ணத்தில் ஈஸ்ட்டுடன் சீனி சேர்த்து 2 மே.க வெதுவெதுப்பான நீர் விட்டு கலக்கி 10 நிமிடம் வைக்கவும். இத்துடன் கோதுமை மா, கடலை மா சேர்த்து கலந்து மேற் சொன்ன அளவு எண்ணெயை சூடாக்கி ஊற்றி ,1/3 வெது வெதுப்பான நீரை விட்டு கட்டியில்லாமல் கலந்து 1 மணி நேரம் வைக்கவும்.

சீனிப்பாகு காய்ச்ச வேண்டிய பதம் ஒட்டுப் பதம் போதும் பாகு காய்ச்சத் தேவையில்லை பாகு மேலும் கெட்டியாவதை தடுக்க எலுமிச்சை சாறு கலந்து மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறம் சேர்த்து ஏலக்காய்தூள் கலந்து விடுங்கள்.


ஜிலேபிகள் பொரிக்கத் தேவையான அளவு எண்ணெயை விட்டு சூடாக்கி சதுரமான பருத்தித் துணியில் மாவை ஊற்றி நுனியில் துளையிட்டு நுளம்புச் சுருள் போலவோ அல்லது ஒரு சோஸ் பாட்டிலைக் கூட நீங்கள் பயன்படுத்தலாம். பொரித்தெடுத்து ஜிலேபிகளை நேராக சூடான சீனிப்பாகில் முக்கி எடுத்து தட்டில் அடுக்கவும். ஜிலேபிகள் மேசைக்கு வருவதற்கு முன்பே கவனம் அவைகள் தீர்ந்துவிடக்கூடும்.

# இந்திய திருநாட்டின் வளர்ச்சிக்காய் ஊர்கூடி தேரிழுப்போம் !






இந்தியாவின் 75 ஆவது விடுதலை திருநாள் நாளை சிறப்பாக நடைபெறவிருப்பது மகிழ்ச்சி. இதை போல இலங்கையும் 1948 இல் சுதந்திரம் பெற்றது. இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆகின்றன. இலங்கை விடுதலை பெற்று 74 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் தமிழ் மக்களின் துயரங்கள் இன்றும் தொடர்கதையே. இந்திய சுதந்திரப் போருக்கு அளப்பரிய தியாகங்கள் செய்த அண்ணல் காந்தியின் தலைமையில் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தி அகிம்சை வழியில் போராடி பிரிட்டிஷிடமிருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது. அதில் குறிப்பாக தமிழகத்தில் விடுதலைப் போராட்டத்தின் தொடக்கமாக அமைவது வேலூர் புரட்சிதான். மீரட்டில் நடந்த கலவரம் தான் முக்கியமானதென்று சிலர் சொல்வதுண்டு ஆனால் வேலூர் புரட்சி எல்லாவற்றிற்கும் முன்னோடியானது. தமிழகத்தைச் சார்ந்தவர்கள் விடுதலைப் போராட்டத்தினை வீரியமாக எடுத்துச் சென்றார்கள். குறிப்பாக புலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுநாச்சியார், விருப்பாட்சி கோபாலநாயக்கர், தீரன் சின்னமலை என்ற நீண்ட ஒரு பட்டியலே உண்டு. அதற்கு பிறகு சுதந்திரதாகம் வேகம் எடுத்து சுப்பிரமணிய பாரதியாருடைய பாக்கள், அவரது எழுத்துக்கள் என்பவை போராட்டத்தை வீரியத்துடன் முன்னெடுத்த காரணிகளாக அமைந்தன. வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா ஆகியோர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற வீரர்கள் ஆவர். வீரர் வாஞ்சிநாதன் ஆஷ் துரையை மணியாட்சி ரயில்வே நிலையத்தில் சுட்டுக் கொன்றார். தன்னுடைய குருவான வா.உ.சி க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தவர் என்ற வகையில் அவரை செங்கோட்டை வாஞ்சிநாதன் கொன்றார். இப்படியெல்லாம் பல முயற்சிகள் பல்வேறு கட்டங்களில் போராட்



வழக்கறிஞர்.
கே.எஸ்.ராதாகிருஸ்ணன்
செய்தி தொடர்பு செயலாளர்
(தி.மு.க)
ஆசிரியர், கதைசொல்லி

டக்காரர்களினால் முன்னெடுக்கப்பட்டன. அப்படி சர்வபரி தியாகம் செய்து பெற்ற விடுதலைதான் இந்திய திரு நாட்டின் விடுதலை. அன்று இந்தியா முழுவதும் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து அண்ணல் காந்தியின் குரலுக்கு செவி சாய்த்து இமயத்தில் இருந்து தெற்கே குமரிமுனை வரை ஒரே முகமாக மக்கள் திரண்டார்கள். அன்றைக்கு தொலைபேசியெல்லாம் கிடையாது. இப்படி மக்களை ஒன்று திரட்ட தொலைத்தொடர்பு வசதிகள் இன்று போல அன்று இருக்கவில்லை. காந்தி என்ற மகானின் குரல் மக்களிடம் ஒரே விதமாக ஒலித்து விடுதலையை நோக்கி அழைத்துச்சென்றது. எத்தனையோ தியாகங்கள் செய்து நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஐ.என்.ஏ யை நடத்தினார். இப்படி பலருடைய பங்களிப்பு அதில் உண்டு. பண்டிதர் நேரு சர்தார் பட்டேல், தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்த பகத்சிங் உள்ளிட்ட.தோழர்களை எல்லாம் எம்மால் மறக்க முடியாது. ரவீந்திரநாத் தாகூர் திலகர், விப்பின் பால் மற்றும் பக்கிங்காம் சட்டர்ஜி உள்ளிட்ட

ஒவ்வொருவரும் தனித்தனி அடையாளத்தோடு போராடியதே இன்று நாம் கொண்டாடும் விடுதலை ஆகும். இந்த விடுதலைக்கு அப்பாற் சென்று இந்திய சமுதாயத்தை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்ல வேண்டும். பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும். பல்வேறு இன, மத, மொழிகளை மாநில அடிப்படையில் அவதானித்து அவர்களுக்கான உரிமையையும் விருப்பங்களையும் நிறைவேற்றி அந்த மக்களின் நலன்களை கருத்தில் கொள்ள வேண்டும். ஜனநாயக ஆட்சி மலர்வதற்கு வழிகாட்ட வேண்டும். இந்த விடுதலை நாளில் ஊர்கூடி தேர் இழுப்பது போல ஒன்றுபட்டு நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்து எமது கடமைகளையும் நிறைவேற்றுவோம்.





# சுதந்திர போராட்ட மறவர்களுக்கு இதய அஞ்சலிகள் சமர்ப்பணம்!





தங்கள் இன்னுயிரையே அர்ப்பணித்தவர்கள். இந்தியா சுதந்திரம் அடைய பல நல்ல உள்ளங்கள் உயிர் தியாகம் செய்துள்ளனர். பலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிறைவாசம் சென்றுள்ளனர். இன்னும் சிலர் சிறையில் வாழ்ந்தே தங்கள் உயிரை விட்டுள்ளனர். இவ்வளவு சிரமப்பட்டு இந்தச் சுதந்திரத்தை நம் முன்னோர்கள் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

சும்மாவா கிடைத்தது சுதந்திரம் என்று சொல்வார்கள்... இந்த வாக்கியத்தில் எத்தகையதொரு உண்மை அடங்கியிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. ஏனென்றால் உதிரங்களை உரமாக்கி உதித்த சரித்திரம் அல்லவா நம் சுதந்திரம். ஆகஸ்ட் 15 மட்டுமா நாம் நினைவில் கொள்ள வேண்டிய நாள்? இல்லை நமக்காக இரத்தம் சிந்தி நம்மை சுதந்திர காற்றை சுவாசிக்க வைத்த வீரர்களை போற்ற நமக்கு ஒவ்வொரு நாளும் சுதந்திர தினமே! சற்றேறக்குறைய முன்னூறு ஆண்டுகள் வெள்ளையர்களிடம் போராடி நம் சுதந்திரத்தை மீண்டும் பெற்றதில் இந்த ஆகஸ்ட் 15 ஒரு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுள்ளது. காந்தியின் தலைமையில் விடுதலை வேள்வியை நடத்தினார்கள். அவர்களோடு தீவிரத் தன்மையுடன் இயங்கிய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ,கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, வீரன் வாஞ்சிநாதன் போன்றவர்களும் நம் நாட்டு சுதந்திரத்திற்காக



முன்னாள்
அமைச்சர்,
முனைவர்
வைகைச்
செல்வன்,
அ.இ.அ.தி.மு. கழக
இலக்கிய அணிச்
செயலாளர் மற்றும்
அ.இ.அ.தி.மு. கழக
செய்தித் தொடர்புச்
செயலாளர்.

என்பதை இன்றைய தலைமுறையினர் உணர்ந்து செயல்படுவது சிறப்பாக இருக்கும். இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இது பவள விழா ஆண்டாக நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாடும் வகையில், மத்திய மாநில அரசுகள் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. எந்தத் துறையையும் சார்ந்த, ஒவ்வொரு வெற்றியாளரும், இந்த வார்த்தைகளில் பொதிந்திருக்கும் சாதனையாளரும் மந்திரத்தை அறிந்திருப்பார்கள்: வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு இடர்பாட்டிலும், மிகப் பெரிய அனுகூலத்திற்கான விதை ஒளிந்திருக்கிறது.'

துயரின்றி நாம்
வாழ துன்பம் பல
கண்டவர்களுக்கும்
ஒய்யாரமாக நாம்
வாழ உயிர் விட்ட
சிங்கங்களுக்கும்
மானத்தோடு நாம்
வாழ செக்கிழுத்த
செம்மல்களுக்கும்
சுதந்திரமாக நாம்
வாழ சண்டையிட்ட
மறவர்களுக்கும்
சுதந்திர நாளில்
இதய அஞ்சலியை
செலுத்துவோம்.
தேசம் மீது நேசம்
கொண்ட அனைவருக்கும்
வந்தே மாதரம் இனிய

**சுதந்திர தின
நல்வாழ்த்துக்கள்**

# சட்டத்தின் ஆட்சி நிலைக்க எம்மை அர்ப்பணிப்போம்





சுதந்திரத்தியாகிகள் இரத்தம் சிந்தி பெற்ற சுதந்திரம் 75ஆவது அகவையை அண்மிக்கிறது.

சுதந்திரத்தின் வேர்கள் பரந்த பாரதத்திற்கு அம்பேத்காரின் அரசியலமைப்பு அணிசேர்க்கிறது

சட்டத்தின் ஆட்சி நிலவுவதே நல்லாட்சி அது தவிர மற்றதெல்லாம் காட்டாட்சியே என்றால் மிகையில்லை.

சட்டத்தின் ஆட்சி நிலவும் நாடொன்றில் நாட்டின் குடிமக்கள் சட்டத்தை மதித்து செயல்பட வேண்டும். சட்டத்தை மதித்து செயல்படுவதென்றால் சட்டம் பற்றிய அடிப்படை அறிவும், விழிப்புணர்வும், தெளிவும் மக்களுக்கு இருக்கவேண்டும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பதற்கிணங்க கல்விக்கூடங்கள் விளையும் பயிர்களுக்கு முளையிலே சட்டஅறிவு எனும் நீர்வார்க்கப்பட வேண்டும். இது பாரதமாதாவின் ஏக்கங்களுள் ஒன்று.

இன்றைய இளைஞர்களே நாட்டின் நாளைய தலைவர்கள் என்ற வகையில் ஒழுக்க விழுமியங்களை அடுத்த தலைமுறைக்கு நாம் கையளித்து செல்ல வேண்டும்.

இல்லாவிட்டால் வரலாறு எம்மை மன்னிக்காது.

சட்டத்தின் ஆட்சியில் மனிதாபிமானம் ஒன்றே. மாநிலங்களின் எல்லைகளும் ஒன்றே. பல்லின கலாசாரம், மொழிகள், மதங்கள் கொண்ட. அழகிய பூங்கொத்து எம்பாரததேசம்.



முனைவர்.த.விஜய் பாண்டியன்
வழக்கறிஞர் (புது தில்லி) /
சமூக ஆர்வலர்,
மண்டல செயலாளர் அருப்புக்
கோட்டை ஒன்றியம்
பாரதிய ஜனதா கட்சி
தமிழ் நாடு வழக்கறிஞர் பிரிவு

மதங்களின் பெயரால். மாநிலங்களின் பெயரால் மனிதத்தை சாகடிப்பது அர்த்தமற்றது. வீசும் தென்றல் அனைவரது நுரையீரலையும் வருடிச்செல்வது போல் ஓடும் நதிகளும் எமக்கான பாரத மாதாவின் கொடைகளே. நீருக்காய் மாநிலங்களுக்கிடையில் மல்லுக்கட்டுவதெ தற்கு?

போராடிப்பெற்ற சுதந்திரம் தண்ணீர் விட்டு வளர்த்ததல்ல கண்ணீர்கொண்டு காத்தது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த சுதந்திரத்திருநாள் வாழ்த்துகள். இந்தியன் என்ற கர்வம் கொள்வோம் !



# அனைவரையும் சமமாக மதித்தலே உண்மையான சுதந்திரம்





சுதந்திரம் என்ற வார்த்தையின் பொருளை நம் இன்றைய இளைய சமுதாயம் தவறாக உணர்ந்து தான் தோன்றித்தனமாக சட்ட திட்டங்களையும் மீறி தன்னிச்சைப்படி நடப்பதை பார்க்கும் போது மனது வேதனைப்படுகிறது. மேலை நாடுகளின் ஆதிக்கம் நம்மீது திணிக்கப்பட்ட போது சுதந்திர போராட்ட தியாகிகள் பட்ட துயர் கொஞ்சம் நஞ்சமல்ல. அவர்கள் காலத்திற்குப் பின் தனது மக்கள் சீரும் சிறப்புமாக வாழ நினைத்து கொடி ஏந்தினர்.

இன்றைய பொழுது நம் தேசத்தில் மனிதாபிமானம் அற்ற முறையில் மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு மற்றும் பாகுபாடு பார்க்கும் மனநிலை நமக்குள்ளே எப்படி வந்தது எனத்தெரியவில்லை.

எனது தேசிய திருநாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட முன்னோர்களும் அவர்களின் முன்னோர்களும் , அடுத்த சந்ததிகளைப் பாதுகாக்க நினைத்து பல தியாகங்களைச் செய்து அயராது விடுதலைக்காக போராடினர்.

தம் வாழ்க்கையை இயற்கையோடு ஒன்றிணைத்து வாழ்ந்தனர். அவர்கள் அறியாத கலைகளே இல்லை. வானசாஸ்திரம் மற்றும் காலநிலைகள் என அனைத்தையும் கற்று ஆராய்ந்து அதனை எதிர்கால தலைமுறைக்கு, உலகிற்கு கொடுத்துச் சென்றனர்,

ஆனால் இருபத்தியொராம் நூற்றாண்டின் தலைமுறைகள், தன் வாழ்க்கையில் ஆடம்பரம், இன்பங்கள் போன்ற அற்ப் சுகங்களை நினைத்து, தனது முக்கிய கடமைகளான தேசத்தொண்டு, இயற்கை வளங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போன்ற மெய் உணர்வுகளை மறந்து விட்டனர்.

பிறர் சுதந்திரத்தைப் பறித்து இயற்கை வளங்களை, மரம் , காடு, நீர் வளங்களை அழித்து வாழ்வது சுதந்திரம் கிடையாது. இயற்கையைப் பாதுகாத்து அனைத்து மனிதர்களுக்கும் தங்களிடையே ஜாதி, மதம் பார்க்காமல் அனைவரையும் சமமாக




**P.கண்ணன்**
அம்பாசமுத்திரம்
சட்டமன்ற பார்வையாளர்
வழக்கறிஞர் பிரிவு
பாரதிய ஜனதா கட்சி
திருநெல்வேலி மாவட்டம்

பாவித்து, சுயமரியாதையுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சிறப்புடன் வாழ வைப்பதே உண்மையான சுதந்திரம்.

இத்தருணத்தில் நமது நாட்டிற்கு சுதந்திரம் பெற பாடுபட்டு உயிர் நீத்த எமது தேசிய சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

இந்த 75வது சுதந்திர தினம் தேசத் தலைவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைத்து அவர்களின் தியாகங்களை எண்ணிப்பார்த்து ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும்.

மனதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க இயற்கையைப் போற்றி பாதுகாத்து அனைத்து உயிர்களும் சமம் என்ற உள்ளார்ந்த உண்மையைப் புரிந்து நாட்டின் இயற்கை வளங்கள் மற்றும் பூமிக்கு கேடு விளைவிக்கும் வாகனம் மற்றும் புகை , குளிர்சாதனம் , தொழிற்சாலைகள் போன்றவற்றின் பயன்பாடுகளின் தேவைகளைக் கட்டுப்படுத்தி பூமி வெப்பமயமாதலை தடுப்பதே நாம் இயற்கைக்கு செய்யும் பெரிய நன்மையாகும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து , 75வது சுதந்திர தினத்திலிருந்து இயற்கை வளங்களை நம் சுயநலத்திற்காக அழிக்காமல் அவைகளும் செழித்து வளர சுதந்திரம் கொடுத்து பாதுகாப்பு தாருங்கள் என என் தேச மக்களை வணங்கி கேட்டுக்கொண்டு எனது சுதந்திர வாழ்த்துக்களை என் மக்கள் சகோதர , சகோதரிகள் என அனைவரிடமும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன் எனக்கு தமிழருவி சர்வதேச ஊடகத்தில் வாழ்த்துச் செய்தியை பதிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.




# ஊழலை ஒழிக்க உறுதி பூணுவோம்!

**சுதந்திர போராட்ட வீரர்களான மருது சகோதர்களின் கொள்ளுப்பேரனும் தமிழக முதல்வரிடமிருந்து வென்றவருமான முனைவர் பிருதிவிராஜின் இதயத்தில் இருந்து.**




பாரததேசம் சுதந்திரத்தின் 75 வது ஆண்டில் காலடியெடுத்து வைக்கிறது. பல தியாகிகள் இரத்தம் சிந்திப் பெற்ற இந்த சுதந்திரம் விலைமதிப்பற்றது.

75 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தில் அடி எடுத்து வைக்கும், என் நாட்டிற்கும் என் உயிரிலும் மேலான என் சர்வதேச உலக இந்திய வம்சாவளி, தமிழ் உறவுகளுக்கும் தெரிவித்து கொள்கிறேன்.

என் முன்னோர்கள் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள் மருது சகோதரர்கள் வம்சாவளியில் வந்த எனக்கும் அவர்களின் இரத்தம் ஓடுவதை என்ணி அளவுகடந்த மகிழ்ச்சி அடைகின்றேன்,

என் நாடும் என் மக்களும் சுதந்திரம் பெற்ற ஆண்டிலிருந்து தற்போது வரை தொழில்நுட்பம், கலைகள்,அறிவியல், விஞ்ஞானம் மருத்துவம், மேலை நாடுகளின் கல்வி எனப்பல பிரிவுகளிலும் முன்னேறியுள்ளனர், மனிதகுலத்தை முன்னேற்ற மேலான ஆய்வுகளும் நடந்துவருகிறது, இருந்தாலும் என் கருத்தின்படி 'மருந்து மாத்திரையால் முடியாதது மனிதத்தால்' முடியும், என்பதை உணர்கின்றேன் .

தற்போது பிறக்கும் எங்கள் 75வது பாரத சுதந்திரத்திலிருந்து ஒரு உறுதி மொழியை நாம் அனைவரும் ஏற்போம் என்ற நம்பிக்கையில் என் பாரத உறவுகளான அனைவருக்கும் நான் உறுதிமொழியை எடுத்துரைப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

ஊழலற்ற சமுதாயமே நமது நாட்டின் பெரும் சொத்து, இந்த நஞ்சை நாம் அகற்றுவதால் மனிதகுலத்திற்கே புத்துயிர் கொடுக்க முடியும் ,அதன் மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும், என் இளைய சமுதாயம் கல்வி ஆராய்ச்சிகளில் அதிகம் பங்குபெற வேண்டுமேயொழிய மது, மாது போன்ற போதைகளினால் தங்கள் வாழ்க்கையை சீர் குலைக்காமல் கண்டிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும். நமது தேசத்தின் பெருமையையும் இந்தியன் என்ற மதிப்



**முனைவர்.
து.பிருதிவிராஜ்
கிராம நிர்வாக அலுவலம்
தமிழ்நாடு அரசு**

பையும் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமை. தமிழருவி சர்வதேச பத்திரிகை வாயிலாக நமது தேச உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன், வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி

**ஜெய்ஹிந்த் ! வந்தே மாதரம்!**

# உலக ஜனநாயகத்துக்கு முன்னுதாரணமாக இந்தியா திகழ்கிறது!





இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் இந்திய மக்களுக்கு, இலங்கைவாழ் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் சார்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்.

வரலாற்றுக்காலம் தொட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேணப்பட்டுவரும் நட்புறவு மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் இ.தொ.கா செயல்படும்.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். பல்லின, பல்மொழி பேசும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் அதன் பன்மைத்துவமே காரணமாகும். உலக ஜனநாயகத்திற்கு முன்னுதாரணமாக திகழும் இந்தியா சுதந்திரமடைந்து 75ஆண்டுகளை கடந்துள்ளது.

மக்களின் ஒற்றுமை, கூட்டாட்சித் தத்துவங்கள், அதிகாரப் பரவலாக்கல் மற்றும் ஆட்சிகள் மாறினாலும் நிலைமாறான அரசக் கொள்கைகளும் நிலைபேண்தகு பொருளாதார கொள்கைகளும் இந்தியாவின் வளர்ச்சிக்கு உந்துச்சக்தியாக அமைந்துள்ளது.



**செந்தில் தொண்டமான்
தலைவர். இ. தொ. க.**

உலகத்தில் மிக பெரிய வல்லரசாக மாறுவதற்கான பயணத்தை நோக்கி இந்தியா சென்று கொண்டிருக்கின்றது.அதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு,எனது சுதந்திரதின வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



# இந்தியாவின் இரு விழிகள்


## 104 ஆவது அகவையை அண்மித்தது இந்திய தேசிய கீதம்

இந்திய தேசிய கீதம் ரவீந்திரநாத் தாகூரால் இயற்றப்பட்டு, அதனை ஆந்திர மாநிலம் மதனபள்ளியில் ஆங்கிலத்தில் 'மார்னிங் சாங் ஆஃப் இந்தியா' என மொழி பெயர்க்கப்பட்டு, அவர் மூலமாகவே பாடப்பட்டு 104 ஆண்டுகள் ஆகின்றன.

'விஸ்வ கவி' என மக்களால் போற்றப்படும் ரவீந்திரநாத் தாகூரால் இந்திய தேசிய கீதம் வங்க மொழியில் இயற்றப்பட்டது. இந்திய நாட்டின் கலாசாரம், பெருமைகளை எடுத்துக்கூறும் வகையில் இருப்பதால், இந்த பாடல் கடந்த24.1.1950-ம் ஆண்டில் இந்திய தேசிய கீதமாக, இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இதுகுறித்து 26.1.1950-ல் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கு பின்னணியில் சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்துள்ளன. ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், மதனபள்ளி ஒரு குளிர் பிரதேசமாகும். இவ்விடத்தில் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் கடந்த 1915-ல் பி.டி. கல்லூரியை நிறுவி நடத்தி வந்தார். அப்போது 1919-ம் ஆண்டில் இந்திய சுதந்திர போராட்டம் தீவிரமாக நடைபெற்று வந்தது. இந்த சமயத்தில் பெங்களூர் வந்திருந்த ரவீந்திரநாத் தாகூரை, தனது பி.டி.கல்லூரிக்கும் வருமாறு அன்னிபெசண்ட் அம்மையார் அழைப்பு விடுத்தார். இதனை ஏற்று ரவீந்திரநாத் தாகூர் கடந்த 25.2.1919 முதல் 2.3.1919 வரை பி.டி. கல்லூரியிலேயே தங்கி இருந்தார்.

அப்போது, வங்க மொழியில் தான் எழுதியிருந்த 'ஜன கன மன' பாடலை 28.2.1919-ம் தேதியன்று, 'தி மார்னிங் சாங் ஆஃப் இந்தியா' எனும் தலைப்பில் தன் கைப்பட ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இதனை அன்னி பெசண்ட் அம்மையாருக்கும் காண்பித்தார். இது மிகவும் நன்றாக இருப்பதாகவும், தேசிய ஒருமைப்பாட்டை விளக்குவதாக இருப்பதாகவும் கூறி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார் அம்மையார்.



ரவீந்திரநாத் தாகூரால் ஆந்திராவில் அரங்கேறிய இந்தியர்களின் இதயகீதம்!

அதன் பின்னர் அன்றைய தினமே, 'ஜன கன மன' எனும் வங்க மொழி பாடலை இந்த கல்லூரியின் முதல்வராக இருந்த ஜேம்ஸ். எச். கசின்ஸும் மிகவும் பாராட்டினார். பின்னர் இதே கல்லூரியில் சங்கீத ஆசிரியாக பணியாற்றிய ஜேம்ஸ்.எச். கசின்ஸின் மனைவி மார்கரெட் கசின்ஸ் இதற்கு மெட்டு அமைத்தார். அதன் பின்னர் இக்கல்லூரியில் மாணவர்கள் இந்த பாடலை முதன் முதலில் பாடினர். இதில் ரவீந்திர நாத் தாகூரும் கலந்து கொண்டு தேச பக்தி பாடலாக இப்பாடலை பாடினார். அதன் பின்னர் இப்பாடல், 1950-ல் நம்முடைய தேசிய கீதமாக அங்கீகாரம் பெற்றது. ஆனால் 1919-ம் ஆண்டு முதல் இன்று வரை மதனபள்ளி பி.டி. கல்லூரியில் இப்பாடலை தினமும் அப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் பாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இப்பாடலுக்கு 104 ஆண்டுகள் ஆனதையொட்டி, கடந்த பிப்ரவரி 24-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை கொண்டாடினர். ரவீந்திர நாத் தாகூர் வசித்த அந்த அறை, புதுப்பிக்கப்பட்டது. மேலும் அவர் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இடத்தில் 90 கிலோ எடையில் தாகூரின் பளிங்கு உருவச் சிலை நிறுவப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தன்மானத்தின் அடையாளமாய் தேசியக்கோடி துலங்குகிறது

1929/1930 ல் நடந்த லாகூர் மாநாட்டில் முதன் முதலாக மூவர்ணக் கொடி வடிவமைக்கப்பட்டு ஏற்றப்பட்டது. அது ஒரு கட்சியின் கொடியாக இருந்ததனால், சுதந்திரம் பெறுவதற்கு சில தினங்களுக்கு முன் நமது முதல் குடியரசுத் தலைவராக இருந்த ராஜேந்திரப் பிரசாத் தலைமையில் கல்வித் தந்தை மௌலானா அபுல் கலாம் ஆசாத், கவிக்குயில் சரோஜினி நாயுடு, மூதறிஞர் ராஜாஜி, சட்ட நிபுனர் கே.எம், முன்ஷி மேலும் அண்ணல் அம்பேத்கார் உள்ளடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு பரிந்துரைத்தக் கொடிதான் நாம் இப்போது பயன்படுத்துவது.


இந்தக் கொடியை வடிவமைத்து. தன் கையாலேயே அதனை உருவாக்கி தந்தவர் ஒரு பெண்! முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த சுரையா தியாப்ஜீ. அந்தக் கொடிதான் நம் சுதந்திர இந்தியாவின் முதல் கொடி. அது தான் தேசத்தின் முதல் பிரதமரால் ஏற்றப்பட்டது. அது கதரினால் நெய்யப்பட்டது.

நம் தேசியக் கொடியைக் குறித்த ஒரு வரைமுறை உருவாக்கப்பட்டது. அது Flag code of India (இந்தியக் கொடி வரைமுறை) என்று அழைக்கப் படுகிறது. முதலில் கதரில், கைத்தறியால் மட்டுமே நெய்ய வேண்டும் என்று இருந்தது.

பின்பு wool(கம்பளி), silkல் (பட்டு) இருக்கலாம் என்று 2002 ல் மாற்றம் பெற்றது, எனினும் கைத்தறியில் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்று இருந்தது.

கடந்த ஆண்டு (December 2021), அது மேலும் மாற்றம் பெற்று, polyester என்னும் நெகிழியில் இருந்து தயாரிக்கப்படும் நூலில் இருந்தும் (Plastics fibre) தாயாரிக்கலாம், இயந்திரங்களின் மூலமும் தயாரிக்கலாம் என்று மாற்றம் பெற்றுள்ளது.




## ஏகாதிபத்தியத்தின் தளையறுத்த திருநாள்!

ஏழு தசாப்தங்கள் கடந்து
இன்றும் சுதந்திரக் காற்றை
இந்திய மக்கள் சுவாசிக்க
வணிகமென வந்து
வஞ்சமாய் நாட்டைப்பிடித்து
இந்தியர் சுதந்திரம் பறித்த
ஆங்கிலேய ஆட்சி ஒழிக்க
தம்முயிரைப் பணயமாக்கி
வெவ்வேறு வழிகளில்
போராட்டங்கள் நடாத்தி
சிறைவாசம் அனுபவித்தும்
துன்பங்கள் சகித்தும்
அகிம்சை வழிநின்று
ஆயுதம் இன்றி
சத்தியாக்கிரக வழியில்
போராடி தீபகற்பம் மீட்கத் துடித்த
காந்தியடிகளும்

மறுபுறம் விடுதலைப் போராட்டத்தை
தனி வழி நடாத்திய சுபாஸ் சந்திரபோஸும்

விடுதலை அறிவுடன்
வரலாற்றுச் சூழ்ச்சிகளையும்
பிணைத்து பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம்
பிரித்தாள முனைந்த நேதாஜி தன்
உணர்வூறும் பேச்சுக்களால்
மக்களுக்கும் விடுதலை உணர்வூட்டி
விடுதலைத் தாகம் தணிக்க முயன்றதுடன்

பேனா முனைகளை ஆயுதமாக்கி
தன் கவிதைகளாலும் உரை
நடைகளாலும் ஆங்கிலேயரைத்
தாக்கிப் பாரத தேசம் மீட்கத் துணிந்த
பாரதியும் எனச் சுதந்திரப்போராட்டத்
தியாகிகள் கண்ட கனவுகள் நனவாகி
1947ம் ஆண்டு ஆகஸ்ட்
15 நள்ளிரவில்
நனவாகிட ரோஜாவின்
ராஜா ஜவகர்லால் நேரு
சுதந்திர இந்தியாவின்
பிரதமரான இனிய
நினைவுகளை
இதயம் மீட்டிச்செல்கிறது.



(குகதா)
டக்ஸனா
கிருஷ்ணானந்தன்

# சுதந்திரத்தின் சுவையறிவோம்









அஞ்சலி

ஸ்ரீ முதலாம் வகுப்பு படிக்கிறாள். இவள் மிகவும் சுட்டி. கேள்விகள் கேட்டு கொண்டே இருப்பாள். அவள் வீடு பள்ளியில் இருந்து நடந்து செல்லும் தூரம் தான். தினமும் பள்ளி முடிந்ததும் அவளை கூட்டி செல்ல அவள் அம்மா நடந்து வருவாள். தன் அம்மாவிடம் அன்று பள்ளியில் நடந்த நிகழ்வுகளை எல்லாம் பேசிக் கொண்டே செல்வாள்.

அதே போல் இன்றும் தன் அம்மாவிடம் பள்ளியில் ஆகஸ்ட் - 15 சுதந்திர தின விழா என்றும், அதற்காக போட்டிகள் நடத்தபடுவதாகவும் அதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறும் ஆசிரியர் கூறினார் என்றாள். ஸ்ரீ அவளது அம்மாவிடம், 'அம்மா... சுதந்திர தினம் என்றால் என்ன?' என்று கேட்டாள். 'நாம் விரும்பியதை எந்தக் கட்டுபாடும், தடையுமின்றி, யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் செய்வதுதான் சுதந்திரம். அந்தத் தினத்தை தான் நாம் சுதந்திர தினம் என்று சொல்கிறோம்' என்று கூறினாள்.

ஸ்ரீ அம்மாவிடம் 'எனக்கு புரியவில்லை' என்றாள். 'ம்ம்..... உனக்கு புரியுமாறு சொல்றேன் கேளு.அங்கே பார்தியா பறவைகள் சுதந்திரமாக எந்தத் தொந்தரவுமின்றி பறக்கிறது. அதற்கு தேவையான உணவு , இருக்க இருப்பிடம் என அனைத்தையும் அதன் விருப்பதிற்கு ஏற்றவாறு செய்து கொண்டு சுதந்திரமாக இருக்கிறது.' என்றாள்.


'ஓ.... இதுதானா.... ஆமாம் நம் இந்திய நாட்டிற்கு சுதந்திரம் 1947 ம் வருடம் ஆகஸ்ட்- 15 ம் நாள் கிடைத்தது. நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்க மகாத்மா காந்தி, நேரு, நேதாஜி, வேலு நாச்சியார், ஜான்சி ராணி, வ.உ.சி. , திருப்பூர் குமரன், பாரதியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன்சின்னமலை, போன்ற பல பேர் போராடினார்கள். இந்த வருடம் நாம் 75 - ம் ஆண்டு சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம்' என்று பேசிக் கொண்டே வீட்டிற்கு வந்தார்கள்.

வீட்டிற்கு வந்தவுடனே ஸ்ரீ தினமும் அம்மா ஆசையாக கூண்டில் வளர்க்கும் குருவிகளுக்கு உணவு அளிப்பது வழக்கம். அன்றும் உணவு கொடுத்து விட்டு, தீவிரமாக யோசனை செய்து கொண்டு இருந்தாள். ஸ்ரீயின் அம்மா 'இந்தா பால் குடி என்றாள்.' ஸ்ரீ பாலைக் குடித்து கொண்டே 'அம்மா நாம் வளர்க்கும் குருவிக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கும்' என்றாள்.

ஸ்ரீயின் அம்மா ஒரு நிமிடம் திகைத்து நின்றாள். மௌனமாக கூண்டின் அருகே சென்று, கூண்டின் கதவை திறந்தாள். குருவி பறந்தது. 'இன்று தான் குருவியின் சுதந்திர தினம் ' என்றாள்.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# அடிமைத்தளை அறுத்து அசுரவளர்ச்சி கண்ட தேசம்!




பாதுகாப்புத்துறை உற்பத்திகளில் சர்வதேச அளவில் இந்தியாவின் வளர்ச்சி உலக நாடுகளை ஆச்சரியப் பட வைக்கின்றது. போர்த் தளபாடங்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இந்தியா வளர்ச்சியடைந்திருக்கின்றது. அதேபோல டிஜிட்டல் துறையிலும், பாரிய வளர்ச்சி, மருத்துவத்துறையில் மேற்கு நாட்டவர்களே இந்தியாவை நாடி வரும் அளவுக்கு நவீன மருத்துவத்துறையும், பாரம்பரிய மருத்துவத்துறையும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. இலக்கியம், கலை, சினிமா, விண்வெளி ஆராய்ச்சி

என அனைத்துத்துறைகளிலும் இந்தியாவின் வளர்ச்சி அபாரமானது. இவை ஒருபுறம் இருக்க மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டு அதிகமான சுயாட்சி வழங்கப்பட்டபோதும், இந்தியா என்ற ஒருமைப்பாடு குலையவில்லை. பதிலான மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டது இந்தியாவின் ஒருமைப்பாட்டை மேலும் பலப்படுத்தியது என்று சொல்லலாம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மதராஸ் மாகாணத்தில் இன்றைய தமிழ்நாடு, ஆந்திரா, ராயலசீமா, தட்சிண கன்னடா, பெல்லாரி, உடுப்பி கேரளத்தின் மலபார் பகுதிகள் மற்றும் லட்சத்தீவு போன்ற பகுதிகள் இடம்பெற்றிருந்தன. மதராஸ் மாகாணத்தின் தலைநகராக இன்றைய சென்னையும் கோடைக்காலத் தலைநகராக உதகமண்டலமும் இருந்தன.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு சமஸ்தானங்கள் ஒழிக்கப்பட்டு அரசமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்கள் உருவாகின. அதன்படி பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த மதராஸ் மாகாணம் - மதராஸ் மாநிலமாக 1950 இல் மாறியது. ஆனால் அடுத்த சில ஆண்டுகளிலேயே மொழிவாரி மாநிலக் கோரிக்கைகள் எழத் தொடங்கின.

மதராஸ் மாநிலத்திலிருந்து ஆந்திராவைப் பிரிக்க வேண்டும் என்று சுதந்திரப் போராட்டத் தியாகி பொட்டி ராமுலு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உயிர்த் துறந்தார். இதன் தொடர்ச்சியாகத் தெலுங்கு பேசும் பகுதிகளில் பெரும் போராட்டங்களும் கலவரங்களும் நடைபெற்றன.

இதையடுத்து மதராஸ் மாநிலத்திலிருந்து ஆந்திராவைப் பிரிக்க மத்திய அரசு முடிவுசெய்து 1953ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. அதேவேளையில் பல்வேறு மாநிலங்களில் எழுந்த மொழிவாரி மாநிலப் பிரிப்புக் கோரிக்கையை ஏற்று பிரதமர் நேரு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார். அதன் தொடர்ச்சியாக மாநில மறுசீரமைப்பு ஆணையமும் அமைக்கப்பட்டது. அதன்படி மதராஸ் மாநிலத்திலிருந்து மலபார் பகுதிகள் பிரிக்கப்பட்டு 1956இல் கேரள மாநிலம் உருவானது. இதே போல மதராஸ் மாநிலத்திலிருந்து கன்னடப் பகுதிகள் பிரிக்கப்பட்டு மைசூர் மாநிலமும் உருவானது.

மதராஸ் பின்னர் தமிழ் நாடு என பெயர் மாற்றப்பட்டது. மாநில சுயாட்சி, மொழிவாரியான உரிமைகள் வழங்கப்படுவது தேசிய ஒற்றுமைக்கு ஒருபோதும் குந்தகமாக அமையாது என்பதற்கு இந்தியா சிறந்த உதாரணம்.





வ.விஸ்ணுஜன், தையிட்டி







நாங்களும் படைப்பாளிகளே !




ர.றஜின்பிரசாத்,
பிரான்ஸ்



# இந்தியாவின் தேசிய சின்னங்கள்



- ✱ நாட்டின் சின்னம் - நான்கு முக சிங்கம்
- ✱ தேசிய கீதம் - ஜனகண
- ✱ தேசிய பறவை - மயில்
- ✱ தேசிய விலங்கு- புலி
- ✱.தேசிய மரம் - ஆலமரம்
- ✱ தேசிய ஊர்வன - ராஜநாகம்
- ✱ தேசிய பழம் - மாம்பழம்
- ✱ தேசிய விளையாட்டு - ஹொக்கி
- ✱ தேசிய நதி -கங்கை நதி
- ✱ தேசிய காய்கறி - பூசணிக்காய்

யோ.பிரவீன்,
யா/ யூனியன் கல்லூரி



இந்தியாவின் தேசியப் பறவை





செல்வன் தமிழ்ராஜன்
கபிலக்ஷன்
தொட்டுலாகலை, ஹப்புத்தளை






உ.குணால்
யா/குளமங்கால்
றோ.க வித்தியாலயம்